# அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்தின் உலகளாவிய தலைவர்
## ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்)
## அவர்கள் இலண்டனிலுள்ள பைத்துல் புதூஹ் பள்ளிவாயிலில் 22.02.2013 அன்று ஆற்றிய ஜுமுஆ பேருரை

**தசஹ்ஹுத் தஅவ்வுது மற்றும் சூரா ஃபாத்திஹாவை ஓதிய பிறகு ஹுஸூர் அவர்கள் கூறினார்கள்:**

நான் இன்றைய குத்பாவிற்கும் கூட ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்களைப் பற்றிய முன்னறிவிப்பு தொடர்பாக ஏதாவது தலைப்பில் சிலவற்றைக் கூற வேண்டும் என்று எண்ணியிருந்தேன். பிறகு, பொதுவாக நாம், ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்களைப் பற்றிய முன்னறிவிப்பை கூறுகின்றோம். பிறகு சுருக்கமாக அதைப் பற்றி சிறிது விளக்கிக் கூறுகின்றோம். ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் செய்த பணிகளைப் பற்றி கூறுகின்றோம் என்றும் நினைத்தேன்.

அல்லாஹ் அவர்களுக்கு தன் தரப்பிலிருந்தும் வழங்கியிருந்த ஞானம், கூர்மையான அறிவு, தொலைநோக்குப் பார்வை ஆகியவற்றின் பல்வேறு அம்சங்கள் உள்ளன. கிலாஃபத்திற்கு முன்னுள்ள காலகட்டத்தில் கூட அவர்கள் நிகழ்த்திய சொற்பொழிவுகளும், அன்னாரது எழுத்துக்களும் அறிவாலும் இறை ஞானத்தாலும் நிரம்பியுள்ளன. அவர்களது நூல்களும், சொற்பொழிவுகளும், கட்டுரைகளும் அன்வாருல் உலூம் என்ற பெயரில் பல்வேறு பாகங்களாக வெளியிடப்பட்டுள்ளன. இதுவரை இதன் 23 பாகங்கள் வெளி வந்துள்ளன. ஒவ்வொரு பாகமும் 600க்கும் அதிகமான பக்கங்களைக் கொண்டவையாக உள்ளன. மேலும் இப்பாகங்கள் வெளியிடப்படும். இப்போது இந்தப் பணி நிறைவடைய வில்லை.

இவ்வாறே அவர்களது ஜுமுஆ குத்பாக்களும் அதிகமாக இருக்கின்றது. இந்த குத்பாக்கள் 24 பாகங்களாக வெளியிடப்பட்டுள்ளது. இதன் ஒவ்வொரு பாகமும் கூட முன்னர் கூறியது போன்றே 600க்கும் அதிகமான பக்கங்கள் கொண்டதாகும். இப்போது 1943 ஆம் ஆண்டு வரையிலுள்ள குத்பாக்கள் வெளியிடப்பட்டுள்ளன. மேலும் நான் கூறியது போன்று இதன் பாகங்கள் இன்னும் வெளியிடப்படும் இன்சா அல்லாஹ்.

அவர்களது பணிகளைப் பற்றிய விசயங்களையும், குத்பாக்களையும், சொற்பொழிவுகளையும், கட்டுரைகளையும் ஒன்றுதிரட்டுவதற்காகவும், பரப்புவதற்காகவும் Fazlae Umar Foundation நிறுவப்பட்டது. அது அவர்களது சொற்பொழிவுகள், கட்டுரைகள் போன்றவற்றை பல்வேறு மொழிகளில் மொழியாக்கம் செய்து வருகிறது. ஆங்கிலத்தில் அன்னாரது சில நூல்கள் மொழிபெயர்க்கப்பட்டு அவை ஒருவேளை விரைவில் நமக்கு கிடைத்து விடலாம்; இன்சா அல்லாஹ். சில நூல்கள் கிடைக்கவும் செய்கிறது. பிறகு மற்ற மொழிகளிலும் அவை மொழியாக்கம் செய்யப்படும். சில நூல்கள் அரபியில் மொழியாக்கம் செய்யப்பட்டு வெளியிடப்பட்டுள்ளன. உர்துவிற்கு அடுத்தபடியாக பெரும்பாலான மொழியாக்கங்கள் அரபியில் தான் செய்யப்பட்டுள்ளன என்று நான் கருதுகின்றேன். பல்வேறு நாடுகளைச் சேர்ந்த ஜாமிஆவில் படிக்கின்ற நமது மாணவர்கள் கூட இவற்றை மொழியாக்கம் செய்து வருகின்றார்கள். சாஹிது படிப்பில் தேர்ச்சி பெறுவதற்காக அவர்கள் எழுதும் கட்டுரைக்காக இப்போது இந்த நூல்கள் அவர்கள் மூலம் மொழியாக்கம் செய்யப்பட்டு கட்டுரையாக வெளியிடப்பட வேண்டும் என்பதற்காக அவர்களுக்கு கொடுக்கப்பட்டுள்ளது.

எவ்வாறிருப்பினும், தமது வாழ்நாளிலும் தமது 52 வருட கிலாஃபத் காலகட்டத்திலும் இவை அனைத்துமே அவர்கள் ஜமாஅத்திற்கு வழங்கியுள்ள கருவூலங்களாகும். ஆனால் இவை எண்ணிக்கையில் சில ஆயிரங்களாகத்தான் வெளியிடப்பட்டுள்ளன. ஜமாஅத் சகோதரர்களில் யார் இந்த நூல்களை வாங்குகின்றார்களோ அவர்களும் கூட ஒருவேளைதான் இவற்றை விரிவாகப் படித்திருப்பார்கள். பிறகு புதிதாக பைஅத் செய்த இலட்சக்கணக்கான மக்களும், புதிய தலைமுறையில் உள்ள பலரும் உர்து மொழி தெரியாத காரணத்தால் அவற்றைப் படிக்கவும் முடியவில்லை. அவர்களது மொழியில் அவை அவர்களுக்கு கிடைக்கவில்லை. அவர்களது மொழியில் கிடைக்கும் நூல்களும் கூட நான் ஏற்கனவே கூறியது போன்று மிகவும் குறைந்த எண்ணிக்கையில் தான் இருக்கின்றது. இதனால் புதிதாக பைஅத் செய்தவர்களுக்கும் புதிய

தலைமுறையில் உள்ளவர்களுக்கும் அவர்களது சொற்பொழிவு மற்றும் எழுத்துக்களின் நடையைப் பற்றி எதுவும் தெரியாது. மேலும் அவர்களது அறிவு, இறைஞானம் ஆகியவற்றைப் பற்றியும் சிறிதளவு கூட அவர்களால் கணித்துப் பார்க்க முடியவில்லை. இன்னும் சொல்வதென்றால் எனது வயதை ஒத்த பிறப்பால் அஹ்மதிகளாக இருப்பவர்கள் அல்லது என்னை விட ஓரிரு வருடங்கள் வயதில் பெரியவர்களாக இருப்பவர்களுக்கும் கூட அன்னாரது குத்பாக்கள் மற்றும் சொற்பொழிவுகளின் நடை பற்றி புரிந்து கொள்ள முடியாது. நாம் இந்த தொகுப்புகளை இந்த கருவூலங்களை படித்தால் தான் நாம் அவர்களது விரிவான அறிவையும் அல்லாஹ்வின் தரப்பிலிருந்தும் வெளிப்புறமான மற்றும் அந்தரங்கமான அறிவுகளால் அவர்கள் நிரப்பப்பட்டிருப்பார்கள் என்ற முன்னறிவிப்பு நிறைவேறி இருப்பதையும் புரிந்து கொள்ள முடியும். மேலும் நமது அறிவையும் நாம் அதிகரித்துக் கொள்ள முடியும். அந்தக் காலத்தில் வீடியோ மற்றும் ஆடியோவிற்கான வசதிகள் இருக்கவில்லை. அவர்களது ஒன்றிரண்டு சொற்பொழிவுகள் அவர்களது கிலாஃபத்தின் இறுதிக் காலகட்டத்தில் பதிவு செய்யப்பட்டிருக்கின்றது. அவ்வாறு பதிவு செய்யப்பட்டவை கூட காலம் செல்லச் செல்ல ரிகார்டு செய்யப்பட்ட அந்தக் குரல் போதுமான அளவு தெளிவாக இல்லை. அவர்களது பாணியையும், பேச்சு நடையையும் பிரதிபலிக்கும் வகையிலுள்ள அந்தப் பொலிவும் மகிமையும் ரிக்கார்டிங்கில் இல்லை. அவர்களது குத்பாக்கள், எழுத்துக்கள், சொற்பொழிவுகள் ஆகியவை போதுமான அளவு ஒன்றுசேர்க்கப் பட்டுள்ளது. போதுமான அளவு என்று நான் கூறுவதற்கான காரணம் அந்தக் காலத்தில் எழுதியவர்கள் இவற்றை எழுதி வந்தனர். அவ்வாறு எழுதுகின்ற போது அவர்கள் குத்பாக்களையும் அவர்களது எழுத்துக்களையும் முழுமையாக எழுதவில்லை. அல்லது சில சொற்றொடர்களை அவர்கள் விட்டு விட்டனர் என்பதை நம்மால் உணர முடிகின்றது. சில விசயங்களை அவர்கள் எழுதாமல் விட்டு விட்டனர். எவ்வாறிருப்பினும், இன்று நான் இந்த முன்னறிவிப்பு தொடர்பாக கூறுவதற்குப் பதிலாக அவர்களது ஒரு குத்பாவை காலத்தைக் கருத்தில் கொண்டவாறு அவர்களது சொற்களிலேயே எந்த அளவு அதிகமாக கூற முடியுமோ அந்த அளவு கூற வேண்டும் என்று எண்ணினேன். நான் தேர்ந்தெடுத்த குத்பாவும் துஆவிற்கான வழிமுறை, இறைவனே எல்லா வல்லமைகளின் எஜமானனாக இருக்கின்றான். அவன் எதை விரும்புகின்றானோ அதுதான் நடக்கும் என்பதிலுள்ள நிச்சய உறுதி ஆகியவற்றைப் பற்றியதாகும். இந்த விசயத்தை நான் தேர்ந்தெடுத்ததற்கான காரணம் இன்றும்கூட நாம் வழக்கத்திற்கு மாற்றமாக சிறந்த நல் விளைவுகளைப் பார்க்க விரும்பினால் இந்த கருத்து தொடர்பான சரியான அறிவும் நமக்கு தேவை. அதை நாம் செயல்படுத்த வேண்டிய தேவையும் நமக்கு இருக்கின்றது.

நான் குறிப்பிட இருக்கின்ற இந்த குத்பா 1942 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 10 ஆம் தேதி நிகழ்த்தப்பட்டதாகும். இதை அவர்கள் இவ்வாறு ஆரம்பம் செய்கின்றார்கள்:

சகோதரர்களுக்கு தொடர்ச்சியாக நான் துஆவின் பக்கம் கவனமூட்டினேன். இப்போது நண்பர்கள் தரப்பிலிருந்தும் வருகின்ற சீட்டுகள் மற்றும் கடிதங்களிலிருந்தும் ஜமாஅத்திலுள்ள ஒரு சாராருக்கு தற்போதுள்ள குழப்பமான சூழ்நிலையைக் கருத்தில் கொண்டு துஆ செய்ய வேண்டும் என்ற எண்ணம் ஏற்பட்டுள்ளது தெரிய வருகிறது. ஆனால் ஒரு சாரார் செய்யும் துஆ மட்டும் போதுமானதல்ல.

இங்கு நான் இதையும் கூறி விடுகின்றேன். இன்றைய நாட்களிலும் இதே நிலைமை தான் இருந்து வருகிறது. நான் மீண்டும் மீண்டும் கூறிய பிறகும் கூட துஆவின் பக்கம் கவனம் செலுத்துவது, தங்களது நிலைமைகளில் மாற்றத்தை ஏற்படுத்துவது ஆகியவற்றின் பக்கம் எந்த அளவு கவனம் ஏற்பட வேண்டுமோ அந்த அளவு ஏற்படவில்லை.

ஆண்களும், பெண்களும், குழந்தைகளும் தங்களது எண்ணங்களை துஆக்களினால் மாற்ற வேண்டியது அவசியமானதாகும். அவர்களது எண்ணங்கள் எப்படி மாற்றப்பட வேண்டும் என்றால், எல்லாவற்றையும் விட முதலாவதாக துஆவின் மீது நிச்சய உறுதியும் ஈமானும் உருவாக வேண்டும். எந்த நபர் நிச்சய உறுதி இல்லாமல் துஆ கேட்கின்றாரோ அவரது துஆ இறைவனால் ஏற்றுக் கொள்ளப்படாது. அப்படிப்பட்ட நபரது துஆ எப்போதாவது ஏற்றுக் கொள்ளப்படலாம். அந்த நபரது உள்ளத்தில் உறுதியை ஏற்படுத்துவதற்காக ஒரு முன்மாதிரிக்காக அந்த துஆ ஏற்றுக் கொள்ளப்படலாம். ஆனால் இறை சட்டத்திற்கேற்ப எவரது உள்ளத்தில்

இறைவன் எனது துஆக்களை ஏற்றுக் கொள்வான் என்ற உறுதி இருக்குமோ அவரது துஆவையே அல்லாஹ் ஏற்றுக் கொள்கின்றான்.

இறைவன் திருக்குர்ஆனில் கூறுகின்றான்: துன்பத்திற்கு ஆளானவர் அவனிடம் பிரார்த்தனை செய்யும்போது அவரது வேண்டுதலுக்கு பதிலளிப்பவன் எவன்? (27:63)

பிறகு அல்லாஹ்தான் அதனைக் கேட்கின்றான் என்றும் கூறுகின்றான். முழ்தர் என்பதற்கு அரபியில் ஒருவரை நாலாபுறமும் இங்குமங்கும் அலைக்கழித்து, பிறகு ஏதாவது ஒரு பக்கம் கொண்டு செல்லுதல் என்பது பொருளாகும். அவர் நான்கு புறத்திலும் வழிகள் அடைக்கப்பட்டிருப்பதைப் பார்த்து விட்டு ஏதாவது ஒரு பக்கம் செல்கின்றார். அவரே முழ்தர் என்று அழைக்கப்படுபவராவார். அவர் எல்லா பக்கமும் நெருப்பைப் பார்க்கின்றார். தனது வலப்பக்கத்தில் பார்க்கும் போது அவருக்கு நெருப்பு தெரிகிறது. தனது இடப்பக்கத்தில் பார்க்கும் போது அவருக்கு நெருப்பு தெரிகின்றது. தனக்கு கீழே பார்க்கும் போதும் அவருக்கு நெருப்பு தெரிகின்றது. தனக்கு மேலே பார்க்கும் போதும் அவருக்கு நெருப்பு தெரிகின்றது. அவருக்கு முன்னால் இறைவன் இருக்கின்ற ஒரேயொரு பக்கம் மட்டுமே அவருக்கு எஞ்சியிருப்பது தெரிய வருகிறது. அதன் மீது அவரது பார்வை விழுகின்றது. மற்ற எல்லா பக்கங்களிலும் அவருக்கு நெருப்பு மட்டுமே தெரிகின்றது. ஆனால் ஒரு பக்கத்தில் மட்டும் அவருக்கு அமைதி தென்படுகின்றது. இதிலிருந்தும் முழ்தர் என்று கூறப்பட்டிருப்பதிலிருந்து துன்பத்திற்கு ஆளானவருக்கு இறைவன் மீது உறுதி இருக்க வேண்டும் என்பது அவசியமானதாகும் என்பதை நீங்கள் புரிந்திருப்பீர்கள். முழ்தர் என்பதற்கு அவரது உள்ளத்தில் பதற்றம் ஏற்பட்டிருக்க வேண்டும் என்பது மட்டும் பொருளல்ல. பதற்றம் ஏற்படும் போது சில நேரங்களில் ஒருவர் எங்கு செல்கின்றாரோ அங்கு அவருக்கு நிம்மதி கிடைக்குமா என்ற உறுதியில்லாத நிலையிலேயே சற்றும் தயக்கமில்லாமல் ஒரு திசையை நோக்கி அவர் சென்று கொண்டிருப்பதைப் பார்க்கின்றோம். சில மக்கள் பதற்றத்தின் போது அவர்களுக்கே ஆபத்தாக இருக்கின்ற திசையை நோக்கி சென்று விடுகின்றனர். பிறகு அதிலிருந்தும் அவர்களால் தப்பிக்க முடிவதில்லை. எனவே உள்ளத்தில் அமைதியின்மை உருவாவது மட்டும் ஒருவர் துன்பத்திற்கு ஆளானவர் என்பதற்கான ஆதாரமாகாது. நான்கு பக்கமும் அடைக்கலம் புகுவதற்கான எந்த இடமும் மனிதனுக்கு தென்படாமல் இருப்பதும் ஒரு பக்கம் மட்டும் அடைக்கலத்திற்கான வழி தென்படுகின்ற அந்த நிலைமைதான் மனிதன் துன்பத்திற்கு ஆளாகியுள்ளான் என்பதை நிரூபிக்கின்றது. அதாவது நான்கு பக்கமும் நெருப்பு தெரிவது மட்டும் ஒருவர் துன்பத்திற்கு ஆளாகியுள்ளார் என்பதற்குரிய அடையாளமல்ல. மாறாக ஒரு பக்கம் மட்டும் அவருக்கு நிம்மதி தென்படுவதும் இதற்கான ஓர் அடையாளமாகும். அதன் மூலம் அந்த இடத்தில் நெருப்பு இல்லை என்று மனிதனால் கூற முடியும். அப்படிப்பட்டவரது அந்த துஆ தான் இறைவன் முன்னிலையில் ஏற்றுக் கொள்ளப்படுகிறது. அதை செய்யும் போது இறைவனைத் தவிர எனக்கு அடைக்கலத்திற்கான வேறு எந்த இடமும் இல்லை என்ற உறுதி அவருக்கு இருக்கும்.

துன்பத்திற்கு ஆளானவரின் இத்தகைய நிலைமை பற்றி தான் ஹஸ்ரத் ரஸுலே கரீம் (ஸல்) அவர்கள், *இறைவா! உனது தண்டனையிலிருந்தும் உன் தரப்பிலிருந்து வரும் சோதனைகளிலிருந்தும் நான் தப்பித்து அடைக்கலம் புகுவதற்கான எந்த இடமும் இல்லை. எல்லா தரப்பிலும் அவநம்பிக்கையடைந்து கண்களை மூடியவாறு உன் பக்கம் வருவதைத் தவிர வேறு வழி எனக்கில்லை.*

ஆக, லாமல்ஜா வலாமன்ஜா என்ற நிலைமைதான் துன்பத்திற்கு ஆளானவரது நிலைமையாகும். இறைவன் திருக்குர்ஆனில், துன்பத்திற்கு ஆளானவரது வேண்டுதலை யார் கேட்கின்றார் என்பதை கூறுங்கள் என்று கேட்கும் போது துன்பத்திற்கு ஆளானவர் என்பவர் யார்? இறைவனைத் தவிர வேற எவரையும் தனக்கு அடைக்கலத்தை வழங்குபவனாகவும் இரட்சிப்பை வழங்குபவனாகவும் கருதாமல், இறைவனைத் தவிர வேறு எவரையும் தனக்கு அடைக்கலத்தையும், இரட்சிப்பையும் வழங்குபவனாக ஆக்கிக் கொள்ளாமலும் இருப்பவரே அவர். அந்த நபர் செய்யும் துஆ பற்றியே கூறப்பட்டுள்ளது.துன்பத்திற்கு ஆளானவர் அவனிடம் பிரார்த்தனை செய்யும்போது அவரது வேண்டுதலுக்கு பதிலளிப்பவன் எவன்? (27:63)என்ற வசனத்தில் உண்மையிலேயே இத்தகு நிம்மதியற்ற நிலைமையின் பக்கமே சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. முழ்தர் என்ற சொல்லிற்கு அறிவுப்பூர்வமான விளக்கத்தைக் கூறி இந்த வசனத்திலுள்ள கருத்துக்களை விளக்கிய பிறகு அவர்கள் தமது சொற்பொழிவில் மேற்கொள்ளும் வழிமுறைக்கேற்ப முழ்தர் என்று கூறப்பட்டவரது பல்வேறு தேவைகள் மற்றும் நிலைமைகளை

எடுத்துக் கூறி அதற்கான உதாரணங்களையும் சம்பவங்களையும் எடுத்துக் கூறியுள்ளார்கள். அவர்களது ஒவ்வொரு சொற்பொழிவும் சம்பவங்கள் மற்றும் உதாரணங்கள் ஆகியவற்றால் நிரம்பியிருந்தது.

அவர்கள் கூறுகின்றார்கள்: உலகில் நிம்மதியின்மை என்பது பல வகையில் ஏற்படுகின்றது. எனவே தான் இங்கு அல் முஸ்தர் என்ற சொல் வைக்கப்பட்டுள்ளது. அதற்கு எல்லா விதமான நிம்மதியின்மை என்பது பொருளாகும். உலகில் சில அடியார்கள் நிம்மதியற்ற நிலையில் இருக்கின்றனர். நிம்மதியற்ற அனைவருக்கும் அல்லாஹ் தான் சிகிச்சையாக விளங்குகின்றான் என்றாலும் அவன் வழங்கியுள்ள அருட்கொடைகளிலிருந்து பலன் பெற்றவாறு அவனது ஒரு அடியாரும் நிம்மதியற்றவரின் நிலைமையை மாற்றுவதற்குரிய ஆற்றலை உடையவராகத் திகழ்கின்றார். உதாரணமாக, ஒரு ஏழை மனிதரின் ஆடை கிழிந்து விடுகிறது. புதிய ஆடையை நான் எங்கிருந்து தைத்துப் பெறுவேன் என்பது அவருக்கு தெரியாது. சில நேரங்களில் இந்துவாகவோ, சீக்கியராகவோ, பாரசீகத்தைச் சேர்ந்தவராகவோ, நாத்திகராகவோ அல்லது வேறு எவராகவோ இருக்கின்ற ஒரு செல்வந்தர் அவருக்கு புதிய ஆடையை தைத்துத் தருகின்றார்.

இந்த குத்பா மிக நீளமானதாக இருப்பதால் இங்கு நான் சில விசயங்களைச் சுருக்கமாகக் கூறுகின்றேன். அவர்கள் கூறுகின்றார்கள்:

நாம் உறுதியாக நம்புவதற்கேற்ப இந்த ஏழை மனிதனுக்கு புதிய ஆடையை தைத்துக் கொடுக்க வேண்டும் என்ற எண்ணத்தை அந்த செல்வந்தரிடம் இறைவன்தான் ஏற்படுத்தியிருக்கின்றான். ஆனால் முழுமையான ஈமான் இல்லாதவர் எனது நிம்மதியற்ற இந்த நிலைமையில் இந்த மனிதர் தான் எனக்கு உதவினார் என்று கருதுகின்றார்.

எந்த செல்வதந்தர் இவருக்கு புதிய ஆடைகளைத் தைத்துக் கொடுத்தாரோ அவர், இந்த நபர் சாப்பிடுவதும் குடிப்பதும் தனக்கு ஹராமாக ஆகிவிடும் அளவிலுள்ள ஒரு நோயால் பாதிக்கப்படும் போது, மேலும் குடிக்கும் தண்ணீர் ஜீரணமாகாமல் இருக்கின்ற நிலையில் அவரது முழு ஆரோக்கியமும் கெட்டு விடும் நிலையில் அவரால் நடக்கக் கூட முடியாமல் ஆகும்போது அப்படிப்பட்ட நிலைமையில் அந்த செல்வந்தர் அவருக்கு உதவி செய்ய முடியாது. அப்போது சிறந்த மருத்துவர் ஒருவரால் தான், திறமையுள்ள கருணையுள்ளம் கொண்ட ஒரு மருத்துவரால் தான் அவருக்கு உதவ முடியும். அப்படிப்பட்டவர் அவரைப் பார்த்ததும் உமக்கு சிகிச்சைக்காக செலவு செய்வதற்கான நல்வாய்ப்பு இல்லையென்றால் நான் உனக்கு இலவசமாக மருந்து வழங்குவதற்குத் தயாராக உள்ளேன் என்று கூறுகின்றார்.

கூறுகின்றார்கள்: இத்தகு நிம்மதியிழந்த நிலைமையில் செல்வந்தர் அவருக்கு உதவி செய்யவில்லை. மாறாக, மருத்துவர் தான் அவருக்கு உதவி செய்துள்ளார். பிறகு சில நேரங்களில் இவ்வாறும் நடக்கின்றது. ஒருவர் மீது வழக்கு தொடரப்படுகிறது. அவர் பாவம் செய்யாதவராக இருப்பார். அவரது எதிரியோ வலிமைமிக்கவராக இருப்பார். அந்த எதிரி ஏதோ ஒரு காரணத்தால் இவர் மீது வெறுப்படைந்து இவரை தனது பிடியில் கொண்டு வந்து அவரை நீதிமன்றம் வரை செல்ல வைக்கின்றார். அவர் தனக்கென்று ஒரு வழக்கறிஞரை வைத்துக் கொள்ளக்கூடிய நல்வாய்ப்பு இல்லாதவராக இருக்கின்றார். தானே வாதாடுவதற்குரிய தகுதியும் அவருக்கு இல்லை. என்ன செய்வது? என்று அவர் திகைத்து நிற்கின்றார். இறுதியில் ஒரு வழக்கறிஞர் அவருக்கு கிடைக்கின்றார். அவர் நான் உன்னிடம் ஃபீஸ் வாங்காமலேயே உனது இந்த வழக்கை நடத்தத் தயாராக இருக்கின்றேன் என்று கூறுகின்றார். இப்போது இந்த சந்தர்ப்பத்தில் வேறு யாரும் அவருக்கு உதவி செய்ய முடியவில்லை. வழக்கறிஞரால் மட்டுமே அவருக்கு உதவ முடிந்தது.

இவ்வாறே ஒரு விவசாயி பற்றிய உதாரணத்தையும் எடுத்துக் கூறியவாறு மேலும் அவர்கள் கூறுகின்றார்கள்:

ஒரு மனிதனுக்கு ஏற்படுகின்ற பல்வேறு நிம்மதியற்ற நிலைமைகளின் போது பலதரப்பட்ட மக்கள் அவனுக்கு உதவுகின்றனர். ஆனால் அல்லாஹ் துன்பத்திற்கு ஆளானவர் அவனிடம் பிரார்த்தனை செய்யும்போது அவரது வேண்டுதலுக்கு பதிலளிப்பவன் எவன்? (27:63) என்று கூறுகின்றான். நிம்மதியற்ற நிலையில் இருக்கின்ற எவருக்கும் அவர் எப்படிப்பட்ட நிம்மதியற்ற நிலையில் இருக்க வேண்டும் என்ற நிபந்தனை

கூறப்படவில்லை. பசியுடன் இருந்தாலும் சரி, நிர்வாணமாக இருந்தாலும் சரி, தாகத்துடன் இருந்தாலும் சரி, நோயுற்றிருந்தாலும் சரி, சுமைகளை சுமந்து செல்பவராக இருந்தாலும் சரி சுருக்கமாக எத்தகைய நிம்மதியற்ற நிலைமையில் அவர் இருந்தாலும் அவரது அனைத்து தேவைகளையும் அல்லாஹ்வால் மட்டுமே நிறைவு செய்ய முடியும்.

சில பகுதிகளை நான் விட்டு விடுகின்றேன். பிறகு கூறுகின்றார்கள்:

எல்லா வகையிலும் நிம்மதியிழந்தவர்களது தேவையை நிறைவு செய்பவர் அல்லாஹ்வேயாவான். மனிதனுக்கு ஆயிரக்கணக்கான நிம்மதியற்ற நிலைமைகள் ஏற்படுகின்றன. இப்படிப்பட்ட நிலைமைகளின்போது ஒரு அரசனால் கூட யாருக்கும் உதவி செய்ய முடியாமல் ஆகிவிடுகிறது. கற்பனையாக வைத்துக் கொள்வோம். ஒரு நபர் கடுமையாக நோய்வாய்ப்பட்டுள்ளார். அரசரின் கருவூலங்களோ அவரது இராணுவமோ அவருக்கு உதவி செய்ய முடியாது. அரசரின் நெருக்கமும் அவருக்கு பயனளிக்காது. அவருக்கு அல்லாஹ்தான் உதவி செய்ய முடியும். எல்லா விதமான நோய்களையும் அகற்றுவதற்கான ஆற்றல் அவனிடம் இருக்கின்றது. அல்லது காட்டில் சென்று கொண்டிருக்கின்ற ஒரு மனிதர் மீது ஒரு சிங்கமோ அல்லது ஓநாயோ திடீரென்று பாய்ந்து அவரை தாக்கினால் எத்தகு வலிமைமிக்க அரசராக இருந்தாலும் அல்லது இளவரசராக இருந்தாலும் அந்த மனிதருக்கு அவர்களால் என்ன உதவி செய்ய முடியும்?

கூறுகின்றார்கள்: காட்டில் அவர் சென்று கொண்டிருக்கும் போது சிங்கமோ, சிறுத்தையோ அல்லது ஓநாயோ அவர் முன்னால் வந்து விட்டால் அப்படிப்பட்ட நிலைமையில் அல்லாஹ்வால் மட்டுமே அவனுக்கு உதவி செய்ய முடியும். எந்த மனிதனும் அவனுக்கு உதவி செய்ய முடியாது. எல்லாவகையான நிம்மதியற்ற நிலைமைகளின் போதும் அல்லாஹ்தான் எனக்கு உதவி செய்கின்றான் என்ற உறுதி ஒரு மனிதனுக்கு ஏற்படாத வரையில் அவன் தன்னை முஸ்தர் அதாவது நிம்மதியற்றவர் என்று கூற முடியாது.

இந்தியாவும் பாகிஸ்தானும் ஒன்றாக இருந்து இந்தியாவின் மீது ஆங்கிலேயர்கள் ஆட்சி புரிந்து வந்த காலகட்டத்தின் உதாரணத்தை எடுத்துக் கூறியவாறு கூறுகின்றார்கள்:

இந்தியாவில் கோழைத்தனத்தை உடைய பல சமுதாயங்களும் ஆங்கிலேயர்களின் ஆதிக்கத்தில் இருந்து வந்தன. ஆனால் ஆங்கிலேயர்களால் அவர்களை வீரர்களாக ஆக்க முடியவில்லை. அவர்களை இராணுவத்தில் சேர்க்க முடியாது என்று மட்டும் அவர்கள் கூறினார்கள். அவர்களது முன்னேற்றத்திற்குரிய காரணியாக அவர்கள் ஆவதற்குப் பதிலாக அவர்கள் முன்பு வீழ்ந்து கிடந்த அதே கோழைத்தனத்தின் குழிகளிலேயே வீழ்ந்து கிடக்கும் நிலையிலேயே அவர்களை வைத்தார்கள்.

ஆனால் அல்லாஹ்வைப் பாருங்கள். அவனோடு தொடர்பு வைப்பதனால் கோழைத்தனத்தை உடைய பலரும் வீரர்களாக ஆகி விடுகின்றனர். சீர்குலைந்து போன பெரும் பெரும் சமுதாயங்கள் சீரான நிலையை அடைந்து விடுகின்றன.

கூறுகின்றார்கள்: இறைவன் எந்த சமுதாயங்களுக்கு முன்னேற்றத்தை வழங்குகின்றானோ அவர்களது நிலைமையை முற்றிலும் அவன் மாற்றி விடுகின்றான். முற்றிலும் அவர்களது உள்ளம் மாறி விடுகின்றது. அவர்களது பலவீனமும் கோழைத்தனமும் அகன்று விடுகின்றது. அவர்களிடம் எத்தகைய சக்தியும் ஆற்றலும் வந்து விடுகின்றதென்றால் அதைக் கண்டு உலகம் வியப்பில் ஆழ்ந்து விடுகிறது.

பிறகு முஸ்லிம்களின் உதாரணத்தை அவர்கள் கூறுகின்றார்கள்:

முஸ்லிம்களைப் பாருங்கள்! அரபு நாடு எத்தகைய நாடாக இருந்ததென்றால் அதன் குடிமக்கள் ஏதாவதொரு அரசனின் ஆதிக்கத்தின் கீழ் இருப்பதையோ முறையாக ஒரு அமைப்பின் கீழ் வருவதையோ சகித்துக் கொள்ள மாட்டார்கள். கோத்திரங்களின் தலைவர்கள் பொதுமக்களிடம் ஆலோசனை கேட்டு அதற்கேற்ப செயல்பட்டு வந்தனர். ஒவ்வொரு கோத்திரமும் தனது இடத்தில் சுதந்திரமானதாகக் கருதப்பட்டது. இன்றைய நாட்களில் சின்னஞ்சிறு பிரதேசத்திற்கு இருக்கின்ற தகுதி கூட அவற்றிற்கு இருந்ததில்லை. ஒரு கோத்திரம் ஆயிரம் பேர்களைக் கொண்டதாகவும், இன்னொரு கோத்திரம் இரண்டாயிரம் பேர்களைக் கொண்டதாகவும், இன்னொரு

கோத்திரம் மூவாயிரம் பேர்களைக் கொண்டதாகவும் இருந்தது. மக்காலிருந்து குடிமக்களின் எண்ணிக்கை கூட 10 அல்லது 15 ஆயிரமாகத்தான் இருந்தது. அவர்களும் கூட பல கோத்திரங்களாக பிரிந்திருந்தனர். பிறகு அவர்களிடம் எந்த அமைப்பும் இருக்கவில்லை. அவர்களிடம் எந்தக் கருவூலமும் இருக்கவில்லை. எந்த சிப்பாயும் இருக்கவில்லை. சிப்பாய்களையும் இராணுவ வீரர்களையும் முறையாக வைத்திருக்கின்ற எந்தத் துறையும் இருக்கவில்லை.

சுருக்கமாக, முற்றிலும் எந்த வழியும் திசையும் இல்லாத ஒரு சமுதாயமாக அது இருந்தது. எந்த சரியான வழிமுறையும் அமைப்பும் அவர்களிடம் இருக்கவில்லை. அப்படிப்பட்ட நிலையில்தான் ஹஸ்ரத் ரஸூலே கரீம் (ஸல்) அவர்களை அல்லாஹ் அனுப்பி வைத்தான். மிகவும் குறைவான எண்ணிக்கையில் இருந்த மக்களே அவர்கள் மீது ஈமான் கொண்டார்கள். ஆராய்ச்சியாளர்களின் ஆய்விற்கேற்ப மக்காவில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் வாழ்ந்த காலத்தில் முழு மக்காவிலிருந்தும் அவர்கள் மீது ஈமான் கொண்டவர்களது எண்ணிக்கை ஏறக்குறைய 100 பேர்களாக இருந்தது. இந்த சிலரே ஹஸ்ரத் ரஸூலே கரீம் (ஸல்) அவர்கள் மீது ஈமான் கொண்டார்கள்.

முதலாவதாக, மக்காவிலுள்ள மக்கள் உலக அளவில் மிகவும் அற்பமானவர்களாக இருந்தனர். இவர்களிடம் எந்த சக்தியும் ஆற்றலும் இருக்கவில்லை. அவர்கள் போர் செய்யும் திறமை உடையவர்களாகவும் தங்களது கோத்திரத்தின் பெருமையை பாதுகாப்பவர்களாகவும் இருந்தாலும் உலக அளவில் அவர்களுக்கு எந்த ஆற்றலும் இருக்கவில்லை. பிறகு இந்த பலவீனமான மக்களிலிருந்து கூட எத்தகைய மக்கள் இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டார்கள் என்றால் அவர்கள் மக்காவில் இருந்தவர்களின் பார்வையில் கூட மிகவும் பலவீனமானவர்களாகக் கருதப்பட்டு வந்தனர். பிறகு அல்லாஹ் அவர்களது உள்ளத்தில் எந்த அளவு வீரத்தை ஏற்படுத்தி விட்டான்? பிறகு அமைப்பற்ற நிலையிலிருந்து எத்தகைய உயர்வான தகுதியிலிருந்த அமைப்பை நாம் அவர்களிடம் பார்க்க முடிந்தது. அரபு நாட்டின் குடிமக்களாக இருந்த இதே மக்கத்துவாசிகள் எவர் கூறுவதையும் கேட்டு செயல்படுவதை சகித்துக் கொள்ள மாட்டார்கள். உலகில் நாகரீகமுள்ள சமுதாயங்களின் அடையாளங்களாக கருதப்படுகின்ற கட்டுப்பட்டு, கீழ்படிந்து நடப்பது என்பது இவர்களது பார்வையில் மிகவும் இழிவான விசயமாக இருந்தது.

பிறகு ஒரு அரபு நாட்டின் புகழ்பெற்ற ஒரு பழங்கதை ஒன்றை உதாரணமாக அவர்கள் எடுத்துக் கூறுகின்றார்கள்:

அரபி இலக்கிய நூல்களில் இவ்வாறு எழுதப்பட்டுள்ளது. அரபு நாட்டில் அமர் பின் ஹிந்த் என்ற பெயரில் ஒரு அரசர் இருந்தார். அவர் சிரியா மற்றும் ஈராக் ஆகியவற்றின் பக்கம் இருக்கின்ற ஒரு பகுதியில் ஆட்சி புரிந்து வந்தார். அரபு நாட்டிலுள்ளவர்களது நிலைமைக்கேற்ப அவர் எத்தகைய வலிமையைப் பெற்றுத் திகழ்ந்தார் என்றால் அரபு நாட்டிலுள்ள அனைவரும் நான் சொல்வதை ஏற்றுக் கொள்ள வேண்டும் என்ற எண்ணம் அவருக்கு ஏற்பட்டது. ஒருநாள் அவர் அரசவையில் உள்ளவர்களிடம் பேசியவாறு நான் கூறுவதை மறுக்கின்ற ஏதாவது ஒரு நபர் அரபு நாட்டில் இருக்கின்றாரா? என்று கேட்டார். அதற்கு தனது கோத்திரத்தின் தலைவராக இருக்கின்ற அமர் பின் குல்ஸூம் என்ற ஒருவர் இருக்கின்றார். எங்களது எண்ணத்திற்கேற்ப அவர் எப்படிப்பட்ட நபர் என்றால் அவர் உங்களுக்கு கட்டுப்பட்டு கீழ்படிந்து நடக்கமாட்டார் என்று அவர்கள் பதில் கூறினர். அதற்கு அந்த அரசர் நல்லது; இதை உறுதிப்படுத்துவதற்காக நான் அவரை அழைக்கின்றேன் என்று கூறினார். அரசர் அமர் பின் குல்ஸூமை விருந்திற்கு அழைத்தார். நீங்கள் வாருங்கள். உங்களை சந்திக்க உள்ளம் விரும்புகிறது என்று அவருக்கு ஒரு கடிதம் எழுதினார். அவர் தனது கோத்திரத்தைச் சார்ந்த சிலரை அழைத்துக் கொண்டு அரசரிடம் வந்தார். இது அவர்களின் வழக்கமாக இருந்தது. அப்போது அரசர் ஏதோ ஓரிடத்தில் கூடாரத்தில் தங்கியிருந்தார். அமர் பின் குல்ஸூம் அந்த இடத்திற்கு வந்து கூடாரமிட்டு தங்கினார். அரசர் அமர் பின் குல்ஸூமிற்கு எழுதிய கடிதத்தில் உங்களது தாயாரையும் மற்ற உறவினர்களையும் அழைத்து வாருங்கள் என்று எழுதியிருந்தார். அதற்கேற்ப அவர் தனது தாயாரையும் அழைத்து வந்திருந்தார். அமர் பின் ஹிந்து தனது தாயாரிடம், நீங்கள் பணியில் ஈடுபட்டுக் கொண்டிருக்கும் போதே அமர் பின் குல்ஸூமின் தாயாரிடமிருந்து ஏதாவது சின்ன வேலையை வாங்கிப் பாருங்கள். அதன் மூலம் இந்த மக்களது நிலைமை எப்படிப்பட்டது என்பது தெரிய வரும் என்று கூறினார்.

பிறகு அவர்கள் சாப்பிடுவதற்காக அமர்ந்ததும் அரசரின் தாயார், அமர் பின் ஹிந்துவிற்கும் அமர் பின் குல்ஸூமிற்கும் உணவைப் பரிமாறத் தொடங்கினார்கள். அந்த சமயத்தில் அரசரின் தாயார் அமர் பின் குல்ஸூம் மற்றும் அவரது உறவினர்களுக்கு செய்ய வேண்டிய பணிகளைச் செய்தார். அரசரது தாயாரே அவர்களுக்கு பணிகளில் உதவி செய்து கொண்டிருக்கும் நிலையில் அமர் பின் குல்ஸூமின் தாயார் ஏதாவதொரு பணியில் உதவி செய்வது ஒருபோதும் எவருக்கும் இழிவையோ கண்ணியக் குறைவையோ ஏற்படுத்தாது. ஏனென்றால் அரசரின் தாயாரும் அங்கு பணியாற்றிக் கொண்டிருந்தார். பிறகு அரசரின் தாயாரே பணியில் ஈடுபட்டிருக்கும் நிலையில் அமர் பின் குல்ஸூமின் தாயாரும் அப்பணியில் அவருக்கு உதவுவது என்பது அவரது மகிமைக்கும் கண்ணியத்திற்கும் எதிரான ஒரு செயல் அல்ல. ஆனால் என்ன சம்பவம் நடந்தது? உணவு பரிமாறிக் கொண்டிருந்த சமயத்தில் ஒரு பாத்திரம் சிறிது தொலைவில் கிடந்தது. அமர் பின் ஹிந்தின் தாயார் உணவு பரிமாறிக் கொண்டிருக்கும் போதே அமர் பின் குல்ஸூமின் தாயாரிடம் சகோதரியே! அந்த பாத்திரத்தை இங்கே சற்று தள்ளி விடுங்கள் என்று கூறினார். இதைவிட அதிகமாக அவரிடமிருந்து வேலை வாங்குவதற்கான தைரியம் அவருக்கு வரவில்லை. ஆனால் வரலாற்றில் இவ்வாறு எழுதப்பட்டுள்ளது. கோத்திரத்தின் தலைவரான அமர் பின் குல்ஸூமின் தாயாரிடம் இந்த விசயத்தைக் கூறியதுதான் தாமதம். அவரது தாய் எழுந்து நின்று மிகவும் உரத்த குரலில் குல்ஸூமின் புதல்வனே! உனது தாய்க்கு இழிவு ஏற்பட்டு விட்டது என்று கூற ஆரம்பித்தார்.

அமர் பின் குல்ஸூம் அந்த சமயத்தில் அரசருடன் உணவு அருந்திக் கொண்டிருந்தார். சாப்பிட்டுக் கொண்டிருந்ததால் அவர் தனது வாளை ஒரு பக்கம் தொங்கவிட்டிருந்தார். ஆனால் தனது தாயாரின் குரலைக் கேட்டதுமே அவர் தன் தாயாரிடம் சென்று உனக்கு என்ன இழிவு நேர்ந்தது? என்று கேட்கவில்லை. கோத்திரத்தின் தலைவர் பதற்றத்துடன் எழுந்து நின்றார். கூடாரத்தில் இங்குமங்கும் பார்த்தார். கூடாரத்தில் அரசரின் வாள் தொங்கிக் கொண்டிருந்தது. அவர் அந்த வாளை உறையிலிருந்து எடுத்தார். பிறகு அரசரைக் கொன்று விட்டார். பிறகு அவர் தனது கோத்திரத்தைச் சார்ந்தவர்களை அழைத்து அரசரின் எல்லா செல்வங்களையும் பொருள்களையும் கொள்ளை அடியுங்கள் என்று கூறினார். இந்த மக்கள் எவருக்கும் கீழ்படிந்து நடப்பதை சகித்துக் கொள்வதில்லை.

ஆனால் பிறகு இதே அரபு நாட்டு மக்களை நாம் பார்க்கின்றோம். ஹஸ்ரத் முஹம்மது ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களது காலத்தில் எவ்வாறு அல்லாஹ் அவர்களது உள்ளத்தை மாற்றினான்? இதே அரபு நாட்டின் மக்களிலிருந்தே புரியும் திறன் கொண்ட படித்த சமுதாயத்தில் கண்ணியமிக்க ஒரு நபராகத் திகழ்ந்த ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் மஸ்வூது அவர்கள் ஒரு தெருவில் நடந்து கொண்டிருந்தார்கள். அப்போது ஹஸ்ரத் ரஸூலே கரீம் (ஸல்) அவர்கள் பள்ளிவாசலில் மக்களுக்கு போதனை செய்து கொண்டிருந்தார்கள். இந்த போதனையைக் கேட்பதற்காகவே அவர்கள் பள்ளிவாசலுக்குச் சென்று கொண்டிருந்தார்கள். அப்போது ஏதோவொரு காரணத்தினால் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அங்கிருந்த மக்களிடம் மக்களே! பள்ளிவாசலில் அமருங்கள் என்று கூறினார்கள். ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் மஸ்வூது அவர்கள் வழியில் நடந்து கொண்டிருக்கும் நிலையல் அவர்கள் இந்தக் குரலைக் கேட்டதுமே அவர்கள் அங்கேயே அமர்ந்து விட்டார்கள். பிறகு குழந்தைகளைப் போல தவழ்ந்து தவழ்ந்து பள்ளிவாசலின் பக்கம் செல்ல ஆரம்பித்தார்கள். அப்போது அவர்களது நண்பர் ஒருவர் அவரைக் கடந்து சென்றார். அவர் அப்துல்லாஹ் பின் மஸ்வூதே! நீங்கள் ஏன் இவ்வாறான வேடிக்கையான செயலைச் செய்ய ஆரம்பித்துள்ளீர்கள் என்று அவர்களிடம் கேட்டார். கீழே தரையில் உட்கார்ந்தவாறே ஏன் செல்கின்றீர்கள்? நேராக நிமிர்ந்து நின்று ஏன் நடக்காமல் இருக்கின்றீர்கள் என்று கேட்டார். அதற்கு அவர்கள் அசல் விசயம் என்னவென்றால், எனக்கு ஹஸ்ரத் முஹம்மது ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் உட்காருங்கள் என்று கூறிய அந்தக் குரல் கேட்டது. நான் பள்ளிவாசல் வரை செல்லும் வரையில் நான் உயிருடன் இருப்பேனா? இருக்கமாட்டேனா? என்று எனக்கு என்ன தெரியும்? முஹம்மது ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களுக்கு கீழ்படியாத நிலையில் எனது முடிவு இருந்துவிடக் கூடாது என்று நான் சிந்தித்தேன். எனவே தான் நான் அந்த இடத்திலேயே அமர்ந்து விட்டேன். பிறகு நான் அமர்ந்திருக்கும் நிலையிலேயே பள்ளிவாசல் பக்கம் செல்ல ஆரம்பித்தேன் என்று கூறினார்கள்.

இப்போது இந்த சம்பவத்தை அமர் பின் குல்ஸுமின் சம்பவத்துடன் ஒப்பிட்டுப் பாருங்கள். ஒரு அரசர் அவரை விருந்திற்கு அழைக்கின்றார். அவரது தாயாரிடம் அரசரின் தாயார் பெரிய வேலை எதையும் செய்யும்படி கூறவில்லை. தான் செய்கின்ற ஒரு பணியைத் தான் செய்யும்படி கூறினார்கள். அதுவும் தனது மகனை விட குறைந்த தகுதியில் இருக்கும் ஒரு நபருக்காக அந்தப் பணியை அவர்கள் செய்தார்கள். அவர் செய்யும்படி கூறிய வேலை ஒரு பெரிய வேலை அல்ல. அதுவும் மிகவும் சாதாரணமான ஒரு சிறிய பணியைச் செய்யும்படியே அவர்கள் கூறினார்கள். ஆனால் கோத்திரத்தின் தலைவரின் தாயாரால் அதை சகித்துக்கொள்ள முடியவில்லை. இந்தப் பணியைச் செய்யும்படி கூறியதுமே அவரது தாய் எனக்கு அவமானம் ஏற்பட்டு விட்டது என கூச்சலிட ஆரம்பித்து விட்டார். ஆனால் இதே பிரிவைச் சேர்ந்த ஒரு நபர் தெருவில் ஹஸ்ரத் ரஸுலே கரீம் (ஸல்) அவர்களது குரலைக் கேட்கின்றார். குரலைக் கேட்டதுமே தெருவிலேயே அமர்ந்து விடுகின்றார். உலகில் பொதுவாக இழிவாகக் கருதப்படுகின்ற அத்தகைய ஒரு செயலையும் அவர் செய்கின்றார்.

பிறகு எழுதுகின்றார்கள்: நிச்சயமாக நீங்கள் அவரை பைத்தியக்காரர் என்று நினைப்பீர்கள். ஆனால் சஹாபாக்களின் நிலை எவ்வாறிருந்தது என்றால் அவர்கள் முஹம்மது (ஸல்) அவர்களுக்கு கீழ்படிந்து நடப்பதில் தங்களை பைத்தியக்காரர்களாகவே ஆக்கிக் கொண்டனர். ஏனென்றால் முஹம்மது (ஸல்) அவர்களுக்கு கீழ்படிந்து நடப்பது இறைவனுக்கு கீழ்படிந்து நடப்பதாகும் என்று அவர்கள் கருதினார்கள்.

**பிறகு ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் தொடர்ந்து எழுதுகின்றார்கள்:**

மதீனாவிலுள்ள மக்கள் போர் செய்வதில் மிகவும் கீழ் நிலையில் இருப்பவர்களாகவும் இழிவானவர்களாகவும் கருதப்பட்டு வந்தனர். இவ்வாறே நமது நாட்டிலும் சில சமுதாயங்கள் போர் புரிவதில் திறமையற்றவர்களாகக் கருதப்படுகின்றனர். மதீனாவிலுள்ள மக்கள் செல்வந்தர்களாக இருந்தனர் என்பதில் எந்த சந்தேகமும் இல்லை. அவர்கள் சிறந்த விவசாயிகளாக இருந்தனர். ஆனால் எவ்வாறு நமது நாட்டில் சில சமுதாயங்கள் தமது சில தொழில்களின் காரணமாக இழிவாகக் கருதப்படுகின்றனரோ அவ்வாறே அவர்களும் இழிவாகக் கருதப்பட்டு வந்தனர். ஏனென்றால் அவர்கள் வயல்களை உழுகின்ற வேலைகளைச் செய்து வந்தனர். வயல்களை உழுகின்ற பணிகளைச் செய்வதை அரபு மக்கள் விரும்புவதில்லை. அரபு நாட்டு மக்கள் தங்களிடம் இத்தனை குதிரைகள் உள்ளன. இத்தனை ஒட்டகங்கள் உள்ளன என்பதில் பெருமை கொள்பவர்களாக இருந்தனர். மேலும் இவ்வாறு கொள்ளையடிக்க வேண்டும். இவ்வாறு தாக்குதல் நடத்த வேண்டும் என்பன போன்ற விசயங்களிலும் அவர்கள் தற்பெருமை கொள்பவர்களாக இருந்தனர். மதீனாவிலுள்ள மக்கள் விவசாயத்தில் ஈடுபடுபவர்களாக இருந்தனர். மேலும் ஒட்டகங்களையும், குதிரைகளையும் அவர்கள் அதிகமாக வைத்திருக்கவில்லை. ஏனென்றால் அவற்றை அதிகமாக வைத்திருந்தால் அவற்றிற்கு எங்கிருந்து அவர்களால் உணவு தர முடியும்? எனவேதான் அவர்கள் அரபு நாட்டு மக்களின் பார்வையில் மற்றவர்களை விட கீழ்நிலையில் இருப்பவர்களாகக் கருதப்பட்டு வந்தனர். அரபு நாட்டு மக்கள் இவர்களைப் பற்றி அவர்கள் காய்கறிகளை விதைக்கின்றவர்கள் என்று கூறி வந்தனர். அவர்கள் செழிப்பான நிலையில் வாழ்ந்து வந்தனர் என்பதில் என்ன சந்தேகம் இருக்க முடியும்? அவர்கள் தோட்டங்களை உருவாக்கினார்கள். வயல்களை செழிப்பாக வளரச் செய்தார்கள். அதன் மூலம் செல்வங்களையும் பொருள்களையும் ஒன்றுதிரட்டுவதில் ஈடுபட்டார்கள். இப்படிப்பட்டவர்களால் எப்படி போர் புரிய முடியும்? அவர்கள் தலைமுறை தலைமுறையாக இதே பணிகளைத் தான் செய்து வந்தனர். எனவே அவர்கள் போர் புரிவதற்கு தகுதியற்றவர்களாக கருதப்பட்டு வந்தனர்.

கூறுகின்றார்கள்: அரபு நாட்டு மக்களின் பார்வையில் மதீனாவிலிருந்த மக்கள் மிகவும் பலவீனமானவர்களாகக் கருதப்பட்டு வந்தனர். இவர்கள் வயலில் உழக்கூடிய வேலையைச் செய்பவர்கள் என்று அவர்களைப் பற்றி இழிவாகப் பேசினர். ஆனால் அதே மக்களைப் பாருங்கள்! அவர்கள் ரஸுலே கரீம் (ஸல்) அவர்களுடன் உறவை ஏற்படுத்திக் கொண்ட பிறகு அவர்களிடம் எவ்வளவு பெரிய மாற்றம் உருவாகி விட்டது? காய்கறிகளை விதைக்கின்ற வயல்களை உழுகின்ற பணிகளைச் செய்து வந்த அதே மக்கள் உலகின் சிறந்த சிப்பாய்களாக ஆகிவிட்டனர். பத்ர் போரின் போது மக்காவிலுள்ள பெரும் பெரும் தலைவர்கள் ஒன்றுதிரண்டிருந்தனர். இன்று முஸ்லிம்களை நாம் அழித்து விடலாம் என்று அவர்கள் நினைத்தனர். பல போர்க்களங்களைக் கண்ட ஓராயிரம் அனுபவமிக்க சிப்பாய்கள், இரவு பகலாக போர்களில் ஈடுபட்டு எதிரிகளை

வாள்வீச்சு மூலம் தாக்குவதையே எப்போதும் தமது பணியாகச் செய்து வந்தவர்கள் இன்று முஸ்லிம்களுக்கு எதிராக அணி திரண்டிருந்தனர். முஸ்லிம்களின் எண்ணக்கை 313 நபர்களைக் கொண்டதாக இருந்தது. இந்த 313 முஸ்லிம்களில் சிலரிடம் வாள் கூட இருக்கவில்லை என்று சில வரலாற்று நூல்களில் எழுதப்பட்டுள்ளது. அவர்கள் அதற்குப் பதிலாக தடிகளைக் கொண்டு வந்திருந்தனர். எவ்வித பொருள்களும் பலமும் இல்லாத இந்த தருணத்தில் ரஸுலே கரீம் (ஸல்) அவர்கள் போருக்காகச் சென்ற போது இரண்டு அன்ஸாரி சிறுவர்களும் பிடிவாதமாக நாங்களும் உங்களுடன் வருவோம் என்று கூறினர். இறுதியில் ஹஸ்ரத் ரஸுலே கரீம் (ஸல்) அவர்கள் தன்னுடன் வருவதற்கான அனுமதியை வழங்கினார்கள். மிகவும் வீரமிக்க அனுபவமிக்க சிப்பாயாக இருந்த ஹஸ்ரத் அப்துர் ரஹ்மான் பின் அவ்ஃப் அவர்கள் அந்த நாளில் எங்களது உள்ளத்திலுள்ள உணர்வுகள் யாருக்கும் தெரிந்திருக்காது. இன்று இறைவன் நமக்கு போர் புரிவதற்கான அனுமதியை வழங்கி இருப்பதால், மக்கத்துவாசிகள் நமக்கு இழைத்த அநீதிகளுக்காக அவர்களை நாம் பழிவாங்குவோம் என்று அவர்கள் கூறுகின்றார்கள்.

ஆனால் அவர்களே தொடர்ந்து கூறுகின்றார்கள்: சிறந்த சிப்பாய் ஒருவர் நன்றாகப் போர் புரிய முடியும் என்றால் அவருக்கு வலப்புறமும் இடப்புறமும் உள்ளவர்கள் வலிமைமிக்கவர்களாக இருக்க வேண்டும். நன்றாக போர் புரியும் திறன் கொண்டவர்களாக இருக்க வேண்டும். அவர் தாக்குதல் நடத்தியவாறு எதிரிகளின் அணிக்குள் நுழைகின்ற போது அவர்கள் இருவரும் அவரது முதுகுப்புறத்தை எதிரிகளின் தாக்குதல்களிலிருந்தும் பாதுகாக்க வேண்டும். எனவே தான் வீரமிக்க சிப்பாய்கள் எப்போதுமே நடுப்பகுதியில் நிற்க வைக்கப்படுவார்கள். ஏனென்றால் அவருக்கு வலப்புறமும் இடப்புறமும் குறிப்பான பாதுகாப்பு இருக்க வேண்டும். அவர் எதிரிகளின் அணியைக் கிழித்தவாறு முன்னேறிச் செல்கின்ற போது அவரது முதுகுப்புறம் பாதுகாக்கப்பட வேண்டும்.

**ஹஸ்ரத் அப்துர்ரஹ்மான் பின் அவ்ஃப் அவர்கள் கூறுகின்றார்கள்:**

நான் எனது இந்த எண்ணத்திற்கேற்ப எனது வலப்புறமும் இடப்புறமும் பார்த்த போது, அதாவது எனது வலது பக்கமும் இடது பக்கமும் யார் இருக்கின்றார்கள் என்று பார்த்த போது, 15 வயதை அடைந்திருந்த இரண்டு அன்ஸாரி சிறுவர்கள் எனது வலது புறத்திலும் இடது புறத்திலும் நின்று கொண்டிருந்தனர். முதலாவதாக அவர்கள் மதீனாவாசிகள் என்பதை நான் எண்ணிப் பார்த்ததும் எனது உள்ளம் சோர்ந்து விட்டது. மதீனாவாசிகள் போர் புரியும் திறனற்றவர்கள் ஆவர். அதிலும் இவர்களோ 15 வயது சிறுவர்களாவர். இவர்கள் என்னை எப்படி பாதுகாக்கப் போகின்றார்கள். எனது உள்ளத்திலுள்ள வேகம் உள்ளத்திலேயே இருந்து விட்டது. எனது பரிதாபமான நிலையைக் கூட நான் வெளிப்படுத்திக் கூற முடியவில்லை.

தொடர்ந்து கூறுகின்றார்கள்: நான் இவ்வாறு நினைத்துக் கொண்டிருக்கையில் எனது வலப்பக்கம் இருந்தவர் தனது கை முட்டால் என்னை இடித்தார். அந்த சிறுவன் பக்கம், அவன் என்ன சொல்லப் போகின்றான் என்று நான் பார்த்த போது, அவன் தனது வாயை எனது காது அருகில் கொண்டு வந்து மெல்லிய குரலில் சிறிய தந்தையே! ரஸுலே கரீம் (ஸல்) அவர்களுக்கு துன்பமிழைத்த அந்த அபூஜஹில் யார்? என்று கேட்டான். எனது உள்ளம் இன்று அவனை பழிவாங்க விரும்புகிறது என்று கூறினான்.

கூறுகின்றார்கள்: எனது உள்ளத்தில் கூட இந்த எண்ணங்கள் வரவில்லை. அபூஜஹில் தலைவன் ஆவான். படையின் நடுவில் அவன் இருக்கின்றான். நன்கு போர் புரிகின்ற வீரர்கள் அவனுடன் அவனது பாதுகாப்பிற்காக நின்று கொண்டிருப்பார்கள். அவன் வரை சென்று அவனை கொலை செய்வேன் என்ற எண்ணம் எனக்கு வரவில்லை. ஆனால் இந்த சிறுவர்களுக்கு இந்த எண்ணம் ஏற்பட்டு விட்டது. எவ்வாறிருப்பினும், நான் சைகை மூலம் சுட்டிக் காட்டினேன். இரண்டு சிறுவர்களுக்குமே அபூஜஹிலை கொலை செய்பவனாக நாம் ஆக வேண்டும். இந்தத் தொண்டு எங்களிடமே ஒப்படைக்கப்பட வேண்டும். இந்தப் பரிசு எங்களுக்கே கிடைக்க வேண்டும் என்ற ஆசை இருந்தது.

**ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்:**

ஹஸ்ரத் அப்துர் ரஹ்மான் பின் அவ்ஃப் அவர்கள் மிகுந்த கவலையுடன் இருந்தார்கள். ஆனால் இந்த இருவரது உள்ளத்திலும் ஈமான் ஒரே விதமான உணர்வைத்தான் ஏற்படுத்தியிருந்தது என்பது அவர்களுக்கு

தெரியாது. ஹஸ்ரத் அப்துர் ரஹ்மான் பின் அவ்ஃப் அவர்கள் கூறுகின்றார்கள். இந்த இருவரது கேள்வியால் எனது உள்ளம் வியப்பில் ஆழ்ந்து விட்டது. அவர்களது ஈமானைப் பார்த்து நான் மிகவும் வியப்படைந்தேன். ஆனால் உங்களது எண்ணம் நிறைவேறுவது என்பது எவ்வளவு சாத்தியமற்ற ஒரு விசயமாக இருக்கின்றது என்பதை உணர்த்துவதற்காக நான் எனது விரலை சைகை மூலம் சுட்டிக் காட்டுவதற்காக உயர்த்தி படைக்கு நடுவில் எந்த நபர் குதிரையில் சவாரி செய்தவாறு வருகின்றாரோ, எவர் தலை முதல் கால் வரை ஆயுதங்கள் தரிக்கப்பட்ட நிலையில் இருக்கின்றாரோ, எவருக்கு முன்னால் இரண்டு தளபதிகள் உருவிய வாளுடன் பாதுகாப்பிற்காக நிற்கின்றார்களோ அவர்தான் அபூஜஹில் என்று கூறினேன். அப்போது அபூஜஹிலுக்கு முன்னால் இக்ரிமா அவர்களும், இன்னொரு புகழ்பெற்ற தளபதியும் உருவிய வாளுடன் பாதுகாப்பிற்காக நின்று கொண்டிருந்தார்கள்.

கூறுகின்றார்கள்: இக்ரிமாவும் சாதாரண சிப்பாய் அல்ல. மாறாக உலகிலுள்ள சிறந்த சிப்பாய்களில் ஒருவராக அவர் இருந்தார். இந்த இருவருமே அந்த சமயத்தில் உருவிய வாளுடன் அபூஜஹிலுக்கு முன்னால் நின்று கொண்டிருந்தனர்.

ஹஸ்ரத் அப்துர் ரஹ்மான் பின் அவ்ஃப் அவர்கள் கூறுகின்றார்கள்: நான் எனது விரலை உயர்த்தி சுட்டிக் காட்டியவாறு அபூஜஹில் யார் என்பதை அவர்களுக்கு தெரிவித்தேன். அவர்களது எண்ணம் நிறைவேறுவது எத்தகைய சாத்தியமற்ற ஒரு விசயமாக இருக்கின்றது என்பதை அவர்களுக்கு உணர்த்துவதற்காகவே அவ்வாறு செய்தேன்.

கூறுகின்றார்கள்: உயர்த்தப்பட்ட எனது விரல் மடக்கப்படுவதற்கு முன்பே எவ்வாறு பருந்து பறவைகள் மீது தாக்குதல் நடத்துமோ அதுபோன்று இவர்கள் இருவரும் ஒரே நொடியில் அபூஜஹிலை தாக்கினர். அப்போது தான் என்ன நடக்கின்றது? என்ற உணர்வு காஃபிர்களின் படையில் இருந்தவர்களுக்கு ஏற்பட்டது. அந்த இருவரும் அபூஜஹிலை காயப்படுத்தி கீழே விழும்படி செய்து விட்டனர். அந்த இருவரில் ஒருவரது கை வெட்டப்பட்டு விட்டது. அவர் வெட்டப்பட்ட கையை தனியாக எடுத்து எறிந்து விட்டு மீண்டும் முன்னேறிச் சென்றார். இவ்வாறு அவர்கள் இருவரும் அபூஜஹிலை காயப்படுத்தி அவனை கீழே விழும்படி செய்தனர். இவ்வாறு பத்ர் போர், தளபதி இல்லாத நிலையில் நடந்தது.

**ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்:**

எந்த சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள் மிகவும் இழிவாகக் கருதப்பட்டு வந்தனரோ, எந்த சமுதாயத்தின் மக்கள் போர் செய்வதற்கே தகுதியற்றவர்கள் என்று கருதப்பட்டு வந்தனரோ அவர்கள் முஹம்மது (ஸல்) அவர்கள் மீது ஈமான் கொண்டதன் விளைவாக அவர்களிடம் எத்தகைய மாற்றம் ஏற்பட்டது? அபூஜஹில் இறக்கும் போது கூட என்னை மதீனாவைச் சேர்ந்த இரண்டு சிறுவர்கள் கொன்று விட்டார்களே என்ற ஏக்கத்துடன் இறக்கின்றான். அவன் சொன்னான். மரணத்தைப் பற்றி நான் கவலைப்படவில்லை. சிப்பாய்கள் போரின் போது மரணிப்பார்கள். அனால் மதீனாவாசியான இரண்டு சிறுவர்கள் என்னை கொன்று விட்டார்களே என்ற கவலையும் வேதனையும் தான் எனக்கு ஏற்பட்டுள்ளது என்று கூறினான். ஆக, எந்த மக்களை அரபு நாட்டிலிருந்த மக்கள் சிப்பாய்கள் என்று கூட கருதாமல் இருந்தார்களோ அவர்கள் முஹம்மது (ஸல்) அவர்கள் மீது ஈமான் கொண்டதும் எந்த இறைவனின் பிடியில் உள்ளங்கள் இருக்கின்றதோ யாரிடம் பலவீனமானவர்களை ஆற்றல்மிக்கவர்களாக ஆக்குவதற்கான சக்தி இருக்கின்றதோ அந்த இறைவன் அவர்களை எந்த அளவு வீரமிக்கவர்களாகவும் பயில்வான்களாகவும் ஆக்கி விட்டான் என்றால், எந்த விசயத்தை ஒரு அனுபவமிக்க தளபதி சாத்தியமற்றது என்று கருதினாரோ இறைவன் அந்தப் பணியை அந்த சமுதாயத்தைச் சேர்ந்த இரு சிறுவர்கள் மூலம் செய்ய வைத்தான்.

பிறகு அரபு மக்களிடம் எந்த அளவு தன்மான உணர்வு இருந்தது என்றால் அதற்கெதிரில் அவர்கள் எல்லாவற்றையும் தியாகம் செய்யத் தயாராகி விடுவர். ஆனால் அதற்குப் பிறகு அல்லாஹ் அவர்களது உள்ளத்தை எவ்வாறு மாற்றி விட்டான் என்று பாருங்கள். உள்ளத்திலிருந்த தன்மான உணர்வு கூட முற்றிலும் அகன்று விட்டதை நம்மால் பார்க்க முடிகின்றது.

பிறகு ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள், ஒரு பெண்ணை திருமணம் செய்ய விரும்பிய இளைஞரான ஒரு சஹாபியின் சம்பவத்தை எடுத்துக் கூறியுள்ளார்கள். அந்த இளைஞர் அந்தப் பெண்ணின் தந்தையிடம் சென்று உங்கள் மகளை எனக்குக் காட்டுங்கள் என்று கூறினார். அதற்கு அவர் இல்லை. பெண்ணை காட்ட முடியாது என்று கூறிவிட்டார். அவர் ஹஸ்ரத் ரஸூலே கரீம் (ஸல்) அவர்களிடம் சென்று அல்லாஹ்வின் தூதர் அவர்களே! நான் ஒரு பெண்ணை திருமணம் செய்ய விரும்புகின்றேன். ஆனால் அந்தப் பெண்ணின் தந்தை தனது மகளை எனக்கு காட்டாமல் இருக்கின்றார் என்று கூறினார். ரஸூலே கரீம் (ஸல்) அவர்கள் அவர் தவறிழைத்துள்ளார். அவர் பெண்ணை காட்டியிருக்க வேண்டும் என்று கூறினார்கள். அந்த இளைஞர் மீண்டும் அந்தப் பெண்ணின் தந்தையிடம் சென்று நீங்கள் பெண்ணை எனக்கு காட்ட முடியாது என்று மறுத்துக் கூறியிருந்தீர்கள். நான் இதுபற்றி ரஸூலே கரீம் (ஸல்) அவர்களிடம் கேட்டேன். அதற்கு அவர்கள் திருமணத்திற்காக பெண்ணை நேரில் பார்ப்பது ஆகுமானதாகும் என்று கூறியுள்ளார்கள் என்று கூறினார். அதற்கு அந்தப் பெண்ணின் தந்தையார் அது ஆகுமானதாக இருக்கலாம். ஆனால் பெண்ணை நான் உனக்கு காட்ட மாட்டேன். நீ வேறிடத்தில் வரன் பார்த்துக் கொள் என்று கூறிவிட்டார். அந்தப் பெண் உள்ளே அமர்ந்தவாறு இந்த எல்லா விசயங்களையும் கேட்டுக் கொண்டிருந்தார். இந்த விசயங்களைக் கேட்டதுமே அந்தப் பெண் தனது முகத்தைக் காட்டியவாறு வெளியே வந்தாள். பிறகு தந்தையாரே! நீங்கள் என்ன கூறுகின்றீர்கள்? முஹம்மது ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் திருமணத்திற்கு முன்னதாக பெண்ணைப் பார்ப்பது ஆகுமானதாகும் என்று கூறியிருக்கும் போது நீங்கள் ஏன் அதை மறுக்கின்றீர்கள்? என்று கேட்டாள். பிறகு அந்த இளைஞரைப் பார்த்து இதோ! நான் உங்கள் முன்னால் இருக்கின்றேன். என்னை நீங்கள் பார்த்துக் கொள்ளுங்கள் என்று கூறினாள். அதற்கு அந்த இளைஞர் எனக்கு உன்னைப் பார்க்க வேண்டிய அவசியமில்லை. இறைவனுக்கும் அவனது தூதருக்கும் கீழ்படிந்து நடக்கின்ற இத்தகைய பெண்தான் எனக்கு தேவை என்று கூறினார்.

பாருங்கள்! அரபு நாட்டு மக்களின் உள்ளங்களை வெளிப்படையாகவே அவர்கள் உலகக் கண்ணியங்களை தியாகம் செய்யும் வகையில் ரஸூலே கரீம் (ஸல்) அவர்கள் எவ்வாறு தயார் செய்து விட்டார்கள். அல்லாஹ்வும் அவனது தூதரும் என்ன கட்டளை பிறப்பித்துள்ளார்கள் என்பதைத் தவிர வேறு எந்த விசயத்தையும் அவர்கள் பார்க்கவில்லை. எனவே உலக அரசாங்கங்களால் உள்ளங்களை மாற்ற முடியாது. உள்ளங்களை அல்லாஹ்தான் மாற்றுகின்றான். அதன் விளைவாக கோழையாக இருப்பவர்கள் இறைவனின் கட்டளைக்கேற்ப வீரர்களாக மாறி விடுகின்றனர். அவ்வாறே இறைவனின் கட்டளைக்கேற்ப வீரர்கள் கோழைகளாக மாறி விடுகின்றனர். இறைவனின் கட்டளைக்கேற்ப கருமியாக இருப்பவர் வள்ளலாக மாறி விடுகின்றார். இறைவனின் கட்டளைக்கேற்ப அறிவீனர் ஆலிமாக மாறி விடுகின்றார். இறைவனின் கட்டளைக்கேற்ப ஆலிமாக இருப்பவர் அறிவீனராக மாறி விடுகின்றார். இறைவன் ஒரு சமுதாயம் தொடர்பாக அதை அழித்து விட வேண்டும் என்று கட்டளையிட்டால் அந்த சமுதாயத்திலுள்ள ஆலிம் அறிவீனராக ஆகி விடுகின்றார். அதன் வீரர்கள் கோழைகளாக ஆகி விடுகின்றனர். அந்த சமுதாயத்திலுள்ள வள்ளல்கள் கருமியாக மாறி விடுகின்றனர். மேலும் அதிலுள்ள ஆற்றல் படைத்த மக்கள் பலவீனமுள்ளவர்களாக ஆகி விடுகின்றனர். இறைவன் ஏதாவதொரு சமுதாயம் தொடர்பாக அது முன்னேற வேண்டும் என்று முடிவெடுத்து விட்டால் அதிலுள்ள கோழைகள் வீரர்களாக ஆகி விடுகின்றார்கள். அந்த சமுதாயத்திலுள்ள அறிவீனர்கள் ஆலிம்களாக ஆகி விடுகின்றனர். அதிலுள்ள கருமிகள் வள்ளல்களாக ஆகி விடுகின்றனர். அதிலுள்ள முட்டாள்கள் அறிவாளிகளாக ஆகி விடுகின்றனர். நான் எனது வாழ்நாளில் இப்படிப்பட்ட பல உதாரணங்களைப் பார்த்துள்ளேன்.

கூறுகின்றார்கள்: அஹ்மதிகளிலும் இப்படிப்பட்ட விசயங்களை நாம் பார்த்துள்ளோம். ஒரு நபர் தூய உள்ளத்துடன் அஹ்மதியாகின்றார். அவர் படிக்காத அறிவீனராக இருக்கின்றார். ஆனால் அஹ்மதியானதும் அவரது நாவு எப்படி திறக்கின்றது என்றால், பெரும் பெரும் மவ்லவிகள் அவரிடம் பேசுவதற்கு அஞ்சுகின்றனர். அவரைத் தவிர்த்து விட்டு தப்பிச் செல்கின்றனர். அறிஞராக இருக்கின்ற சிலர் நமது ஜமாஅத்தில் இணைவதையும் நாம் பார்த்துள்ளோம். ஆனால் அவர்களது உள்ளங்களில் அஹ்மதிய்யத் தொடர்பாக உண்மையான பற்று இல்லாமல் இருப்பதால் அஹ்மதி அல்லாதவராக இருந்த சமயத்தில் மார்க்க அறிவைப் பெறாத முட்டாள்களாக இருந்ததைப் போன்றே அஹ்மதியான பிறகும் இருக்கின்றனர். இதிலிருந்தும் நமது அறிவு நமது சொந்த அறிவு அல்ல. மாறாக அது இறைவன் வழங்கிய அறிவாகும் என்பது தெரிய வருகிறது. நமது வீரம் நம்முடையதல்ல.

இறைவன் வழங்கிய வீரமாகும். நமது தியாகங்கள் நாமே செய்தவையல்ல. மாறாக அவை இறைவன் வழங்கிய நல்வாய்ப்பின் விளைவுகளேயாகும். அவை இறைவன் வழங்கிய வீரமாக இல்லாமல் இருந்தால், அவை இறைவன் வழங்கிய அறிவாக இல்லாமல் இருந்தால், அந்த தைரியம் இறைவன் வழங்கிய தைரியமாக இல்லாமல் இருந்தால் அதற்கு மனத்தூய்மையுடன் என்ன தொடர்பு இருக்கின்றது? பிறகு அதற்கு நமது உழைப்பு, சொந்த முயற்சி ஆகியவற்றுடன் மட்டுமே தொடர்பு இருக்கும். ஆனால் உலகைச் சார்ந்திருக்கும் மக்கள் இந்த விசயங்களை அறியா விட்டாலும் அவர்களது உள்ளத்தில் பற்று இருக்கின்றது.

பிறகு இதற்கான ஓர் உதாரணத்தை அவர்கள் கூறியுள்ளார்கள். அதை சுருக்கமாக நான் கூறி விடுகின்றேன். பீரா என்ற பெயரில் ஒருவர் இருந்தார். அவர் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களது ஊழியராக இருந்து வந்தார். அஹ்மதிய்யத் என்றால் என்ன என்பதை அவரால் புரிந்து கொள்ள முடியவில்லை. ஆனால் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் மீது தனிப்பட்ட முறையில் அவருக்கு மிகுந்த நேசம் இருந்து வந்தது. அவரது பெற்றோர்கள் அவர் நோய்வாய்ப்பட்டிருந்த போது அவருக்கு சிகிச்சை அளிப்பதற்காக ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களிடம் அவரை விட்டு விட்டு சென்று விட்டனர். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் அவருக்கு சிகிச்சை அளித்ததில் அவர் குணமடைந்து விட்டார். அவர் எப்போதும் அவர்களது வீட்டின் முற்றத்திலேயே இருந்து வந்தார். அவரது உறவினர்கள் அவரை திரும்ப அழைத்துச் செல்வதற்காக வந்த போது அவர் யார் எனக்கு சிகிச்சை அளித்தார்களோ அவர்களிடமே நான் இருப்பேன் என்று கூறி விட்டார். அவர்களுடன் திரும்பிச் செல்ல மறுத்து விட்டார். வீட்டு முற்றத்திலேயே அமர்ந்திருப்பார். பிறர் கூறும் தகவல்களைக் கொண்டு வந்து சேர்ப்பது, விருந்தினர்களுக்கு உணவைக் கொண்டு சேர்ப்பது ஆகியவை அவரது பணியாக இருந்தது. ஆனால் தொழுகைகளை தொழாமல் இருந்து வந்தார். ஹஸ்ரத் முதல் கலீஃபத்துல் மஸீஹ் அவர்கள் இங்கேயே உட்கார்ந்து கொண்டு தொழாமல் அவர் இருந்தால் அதன் காரணமாக பிறரது தடுமாற்றத்திற்கு அவர் காரணமாகி விடக்கூடாது என்று கருதி அவரிடம் தொழுகையைப் பேணும்படி கூறினார்கள். அவருக்கு நன்றாக புரிய வைத்தார்கள். ஒருநாள் அவர் ஐந்து வேளை தொழுகைகளையும் தொழுவதற்காகச் சென்றார். அவர் பள்ளிவாசலில் தொழுது கொண்டிருந்த சமயத்தில் உள்ளேயிருந்து வந்த ஒரு பெண் விருந்தாளிகளுக்காக உணவு கொண்டு வந்தார். பிறகு அவரை அழைத்தார். ஆனால் அந்தப் பெண்ணின் குரல் அவர் வரை சென்று சேரவில்லை. பிறகு உரத்த குரலில் அந்தப் பெண் உணவை இங்கிருந்து கொண்டு செல்லுங்கள். இல்லையென்றால் நான் உன்னைப் பற்றி புகார் செய்வேன் என்று உரத்த குரலில் கூறினார். தொழுகை நடந்து கொண்டிருந்தது. எல்லாரும் அத்தஹிய்யாத்தில் அமர்ந்திருந்தனர். அவர் உரத்த குரலில் இதைக் கூறியதால் அவரது குரல் பீரா சாஹிப் வரை எட்டி விட்டது. அதைக் கேட்டதும் அங்கிருந்தவாறே கொஞ்ச நேரம் காத்திருங்கள். அத்தஹிய்யாத்து ஓதவா? வேண்டாமா? என்று கேட்டார். இதுதான் அவரது மூளையின் நிலையாக இருந்தது.

**ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்:**

அந்த சமயத்தில் காதியானில் இரயில்வண்டி இருக்கவில்லை. அஞ்சல் அலுவலகம் இருக்கவில்லை. தந்தி அலுவலகம் இருக்கவில்லை. இரயில் நிலையமும் இருக்கவில்லை. பட்டாலா இரயில் நிலையத்தில் மக்கள் இறங்கும் போது மவ்லவி முஹம்மது ஹுஸைன் சாஹிப் அவர்கள் மக்களிடம் நீங்கள் காதியான் போக வேண்டாம் என்று கூறி அவர்களை தடுத்து வந்தார். அங்கு சென்றால் உங்களது ஈமான் கெட்டு விடும் என்று கூறி வந்தார். ஒருநாள் அவர் முழு நாளும் இரயில் நிலையத்தைச் சுற்றி வந்த பிறகும் கூட வேறு எந்த இரையும் அவருக்கு கிடைக்கவில்லை. அப்போது பீராவைத் தந்தி கொடுப்பதற்காக அங்கு அனுப்பி வைத்திருந்தார்கள். அவரை மவ்லவி சாஹிப் பிடித்துக் கொண்டார். அவரைப் பார்த்து பீரா! உனது ஈமான் கெட்டு விட்டது. மிர்ஸா சாஹிப் காஃபிராகவும் தஜ்ஜாலாகவும் இருக்கின்றார். நவூதுபில்லாஹ். அவருக்குப் பின்னால் சென்று ஏன் உனது முடிவை மோசமானதாக ஆக்கிக் கொள்கின்றாய்? என்று கேட்டார். பீரா அவர் கூறியதைக் கேட்டுக் கொண்டிருந்தார். எல்லாவற்றையும் கூறி முடித்த பிறகு பீரா! நான் கூறிய விசயங்கள் எப்படி இருந்தன? என்று கூறு என்று மவ்லவி சாஹிப் கேட்டார். அதற்கு பீரா, மவ்லவி சாஹிப்! நான் படிக்காதவனும் முட்டாளும் ஆவேன். எனக்கு எவ்வித அறிவும் இல்லை. எந்த விசயத்தையம் என்றால் புரிந்து கொள்ள முடியாது. ஆனால் ஒரு விசயத்தை என்னாலும் புரிந்து கொள்ள முடிகிறது. அது என்னவென்றால், பல வருடங்களாக தந்தி கொடுப்பதற்காக நான் இங்கு வந்துள்ளேன். நீங்கள் எப்போதும் இரயில் நிலையத்திற்கு வந்து மக்கள் காதியான்

செல்வதிலிருந்தும் அவர்களை தடுக்கின்றீர்கள். உங்களது இந்த முயற்சியில் இதுவரை உங்களது எத்தனை ஷுக்கள் தேய்ந்து போயிருக்கும்? மவ்லவி சாஹிப்! அவ்வாறிருந்தும் நீங்கள் கூறுவதை எவரும் கேட்பதில்லை. ஆனால் மிர்ஸா சாஹிபோ காதியானில் அமர்ந்துள்ளார்கள். அவ்வாறிருந்தும் மக்கள் அவர்களின் பக்கம் ஈர்க்கப்படுகின்றனர். ஏதோ ஒரு விசயம் இருப்பதனால் தான் இந்த வித்தியாசம் இருக்கின்றது என்று அவர் கூறினார். பாருங்கள்! இது எவ்வளவு நுட்பமான சரியான பதிலாக இருக்கின்றது. அவருக்கு எந்த ஆதாரமும் தெரியாது. ஆனால் இத்தகைய வலுவான ஒரு பதிலை அல்லாஹ் பீராவிற்கு கற்றுத் தந்தான். அவரது தொழுகையின் நிலை எவ்வாறிருந்தது என்பதை ஏற்கனவே நான் உங்களுக்கு கூறி விட்டேன்.

கூறுகின்றார்கள்: அல்லாஹ் தனது அடியார்களுக்கும் தன்னுடன் தொடர்பு வைத்திருப்பவர்களுக்கும் சில நேரங்களில் எத்தகைய விசயங்களைப் புரிய வைக்கின்றான் என்றால் அதைப் பார்க்கின்ற மனிதனின் அறிவு வியப்பில் ஆழ்ந்து விடுகின்றது. ஏனென்றால் அவனிடம் அதாவது அல்லாஹ்விடம் எல்லா பொருள்களும் இருக்கின்றது. எந்த பொருள் குறைவாக இருக்கின்றதோ அது அவனிடம் இருக்கின்றது. அறிவில் குறைவு இருந்தால் அது அவனிடம் இருக்கின்றது. தைரியத்தில் குறைவு இருந்தல் அதுவும் அவனிடம் இருக்கின்றது. தாராளமாக வழங்குவதில் குறைவு இருந்தால் அது அவனிடம் இருக்கின்றது. ஆரோக்கியத்தில் குறைவு இருந்தால் அது அவனிடம் இருக்கின்றது. கண்ணியத்தில் குறைவு ஏற்பட்டால் அது அவனிடம் இருக்கின்றது. செல்வத்தில் குறைவு ஏற்பட்டால் அது அவனிடம் இருக்கின்றது. சுருக்கமாக, எல்லாவற்றின் கருவூலங்களும் அவனிடம் இருக்கின்றது. தனது அடியார்களுக்கு தனது கருவூலங்களிலிருந்து அவர்களுக்கு தேவைப்படும் பங்கை அவன் எவ்விதத்தில் வழங்குகின்றான் என்றால் அதைப் பார்க்கின்ற மனிதன் வியப்படைகின்றான்.

கூறுகின்றார்கள்: இங்கு காதியானில் ஒருமுறை உலகில் மிகவும் புகழ்பெற்ற பாதிரியாக இருந்த ஸாமெர் என்பவர் வந்திருந்தார். அவர் அமெரிக்காவில் வசிப்பவர். அங்குள்ள மிகப்பெரும் அளவில் பிரச்சாரம் செய்கின்ற ஒரு பத்திரிகையின் ஆசிரியராகவும் அவர் இருக்கின்றார். முழு உலகிலும் உள்ள கிறிஸ்தவ பிரச்சார நிலையங்களில் அவருக்கு ஒரு சிறப்பான இடம் இருந்தது. அவர் காதியானைப் பற்றியும் கேள்விப்பட்டிருந்தார். அவர் இந்தியா வந்ததும் மற்ற இடங்களைப் பார்த்து விட்டு காதியான் வந்தார். அவருடன் கோடன் என்ற பெயருடைய இன்னொரு பாதிரியும் இருந்தார். மர்ஹூம் டாக்டர் கலீஃபா ரஸீதுத்தீன் சாஹிப் அந்த சமயத்தில் உயிருடன் இருந்தார்கள். அவர்கள் அந்த இருவருக்கும் காதியானிலுள்ள எல்லா இடங்களையும் காட்டினார்கள். பாதிரியார் தனது குறும்புத்தனமான செயல்களிலிருந்தும் விலகாமல் இருந்தார். அந்த நாட்களில் காதியானில் டவுண் கமிட்டி இருக்கவில்லை. தெருக்களில் அதிகமாக அசுத்தம் நிறைந்து காணப்பட்டது. பாதிரி ஸாமெர் பேசிக் கொண்டிருக்கும் போதே சிரித்தவாறு நாங்கள் காதியானையும் பார்த்து விட்டோம். புதிய மஸீஹின் கிராமத்தின் தூய்மையையும் பார்த்து விட்டோம். என்று கூறினார். டாக்டர் கலீஃபா ரஸீதுத்தீன் சாஹிப் அவர்கள் சிரித்தவாறே பாதிரி சாஹிப்! முதல் மஸீஹின் அரசாங்கம் தான் இந்தியாவில் இருந்து வருகின்றது. இது அதன் தூய்மையின் உதாரணமாகும். இரண்டாவது மஸீஹின் அரசாங்கம் இன்னும் நிறுவப்படவில்லை என்று கூறினார்கள். இதைக் கேட்டு அவர் வெட்கப்பட்டார்.

**ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்:**

நான் உங்களை சந்திக்க விரும்புகின்றேன் என்று எனக்கு அவர் தூதுச் செய்தி அனுப்பியிருந்தார். எனது உடல்நிலை சரியில்லாமல் இருந்தும் கூட நான் அவரை சந்தித்தேன். அப்போது பாதிரி ஸாமெர் நான் ஒன்றிரண்டு கேள்விகளைக் கேட்க விரும்புகின்றேன் என்றார். அதற்கு நான் கூறுங்கள் என்றேன். மறு பிறவி தொடர்பான இஸ்லாத்தின் கொள்கை என்ன? இஸ்லாம் இந்தக் கொள்கையை ஏற்கின்றதா? மறுக்கின்றதா? என்று அவர் கேட்டார். இந்தக் கேள்வியை அவர் கேட்டவுடன் அல்லாஹ் உடனடியாக இந்த விசயத்தை எனது உள்ளத்தில் போட்டான். அதாவது கேள்வி கேட்பவரின் நோக்கம் என்னவென்றால், நீங்கள் வாக்களிக்கப்பட்ட மஸீஹை நாசரேத்தில் பிறந்த மஸீஹின் பிரதிபிம்பம் என்றும், அவரை போன்றவர் என்றும் கூறுகின்றீர்கள். அதற்கு நாசரேத்தில் பிறந்த மஸீஹின் ஆன்மா இவரிடம் வந்து விட்டது என்றுதானே பொருள் கொள்ள வேண்டும். இவ்வகையில் இது மறுபிறவி கொள்கையாகத்தான் இருக்கின்றது. மறுபிறவி கொள்கையானது திருக்குர்ஆனுக்கு மாற்றமானதாகும் என்றே அவர் கூறவிருந்தார்.

எனவே நான் சிரித்தவாறே அவரிடம் பாதிரி சாஹிப்! உங்களுக்கு தவறு ஏற்பட்டிருக்கின்றது. நான் மிர்ஸா சாஹிபிடம் நாசரேத்தில் பிறந்த மஸீஹின் ஆன்மா வந்திருப்பதாக கருதவில்லை. அவர்களை நாங்கள் நாசரேத்தில் பிறந்த மஸீஹைப் போன்றவர் என்று கூறுவது அவர்கள் தமது ஒழுக்கத்திலும் ஆன்மீகத்திலும் அவர்களை ஒத்த நிறத்தையுடையவர்களாக வந்துள்ளார்கள் என்றே கூறுகின்றோம் என்று கூறினேன். நான் இந்த பதிலைக் கூறியதும் எனது கேள்வி இதுதான் என்பதை உங்களுக்கு யார் கூறினார்? என்று அவர் கேட்டார். அவரது கேள்வி மறைமுகமாக இருந்தது. எவ்வாறிருப்பினும் இதனை நீங்கள் எவ்வாறு கூறுகின்றீர்கள் என்பதை அறிந்து கொள்வதே எனது நாட்டமாக இருந்தது என்று அவர் கூறினார். பிறகு நான் அவரிடம் உங்களது இரண்டாவது கேள்வி என்ன? என்று கேட்டேன். அதற்கு அவர் எனது இரண்டாவது கேள்வி நபியின் வருகை எந்த இடத்தில் நிகழ வேண்டும்? என்பதாகும் என்றார். அதாவது அவர் தனது பணிகளை நிறைவேற்றுவதற்கு எத்தகைய இடம் அவருக்கு இருக்க வேண்டும்? என்றே அவர் கேட்டார். அவர் இந்த இரண்டாவது கேள்வியைக் கேட்டவுடனேயே அல்லாஹ் எனது உள்ளத்தில் இந்த விசயத்தைப் போட்டான். காதியான் ஒரு சிறிய கிராமமாகும். இது உலகின் தலைமையகமாக எப்படி மாறப் போகிறது? அந்த சிறிய கிராமத்திலிருந்தும் முழு உலகிற்கும் நாம் எவ்வாறு பிரச்சாரம் செய்ய முடியும்? முழு உலகிலும் இஸ்லாத்தின் பிரச்சாரத்தை எட்ட வைப்பது தான் மிர்ஸா சாஹிபின் நோக்கமாக இருக்கின்றது என்றால் முழு உலகிலும் அவர்களது குரல் எட்டுகின்ற ஓரிடத்தில் அவர்கள் அனுப்பப்பட்டிருக்க வேண்டும். ஆனால் காதியான் ஒரு சிறிய கிராமமாகும். இந்தக் கிராமத்தில் அல்லாஹ் ஏன் அவர்களை அனுப்பினான்? என்பன போன்ற கேள்விகளே கேள்வி கேட்பவரது அசல் நோக்கமாக இருக்கின்றது என்பதை அல்லாஹ் உடனடியாக எனது உள்ளத்தில் போட்டு விட்டான். நான் மீண்டும் சிரித்தவாறு அவரிடம் பாதிரி சாஹிப் நாசரேத்தை விட பெரிய நகரம் ஒன்றிருந்தால் அங்கு நபி வர முடியுமா? என்று கேட்டேன். முதல் மஸீஹ் எந்தக் கிராமத்தில் தோன்றினார்களோ அந்தக் கிராமத்திற்கு நாசரேத் என்று பெயர். அப்போது நாசரேத்தின் மக்கள் தொகை 10 அல்லது 12 வீடுகளைக் கொண்டதுதான் என்று நான் கூறினேன். எனது இந்தப் பதிலைக் கேட்டு மீண்டும் அவரது நிறம் மாறி விட்டது. நான் இரண்டாவது கேள்விக்கும் பதில் கூறி விட்டதை எண்ணி அவர் வியப்படைந்தார். இவ்வாறே அவர் மூன்றாவதாக ஒரு கேள்வியையும் கேட்டார். அது எனது நினைவில் இல்லை. எவ்வாறிருப்பினும் அவர் மூன்று கேள்விகளைக் கேட்டார். ஆனால் மூன்று கேள்விகள் தொடர்பாகவும் அல்லாஹ் முதலிலேயே கேள்வி கேட்பவர் இந்தக் கேள்விகளைக் கேட்டதற்கான அசல் நோக்கம் என்ன என்பதை எனது உள்ளத்தில் போட்டு விட்டான். அவர் சுற்றி வளைத்து வேறு விதமாக கேள்விகளைக் கேட்டாலும் அல்லாஹ் அவரது அசல் நோக்கம் என்ன? என்பதை எனக்கு வெளிப்படுத்தி விட்டான். இதனால் அவருக்கு எதுவும் பேச முடியாமல் ஆகி விட்டது. இவ்வாறு அல்லாஹ் உள்ளங்கள் மீது வியக்கத்தக்க வகையில் தனது ஆதிக்கத்தை வெளிப்படுத்துகின்றான். இந்த தனது ஆதிக்கத்தின் கீழ் தனது அடியார்களைக் கொண்டு வருவதன் மூலம் அல்லாஹ் அவர்களுக்கு உதவுகின்றான். எனவே, உள்ளங்கள் அல்லாஹ்வின் ஆதிக்கத்தின் கீழ் இருக்கின்றன. அடியார்களின் ஆதிக்கத்தின் கீழ் அது இல்லை.

கூறுகின்றார்கள்: வறட்டு வாதம் செய்கின்ற ஒரு முல்லா பள்ளிவாசலில் வைத்து என்னைச் சந்தித்து மிர்ஸா சாஹிபின் உண்மைக்கான ஆதாரத்தைத் தாருங்கள் என்று கூறினார். நான் திருக்குர்ஆன் இருக்கின்றது. முழு குர்ஆனும் ஹஸ்ரத் மிர்ஸா சாஹிபின் உண்மைக்கு ஆதாரமாகத் திகழ்கின்றது என்று கூறினேன். அது எந்த வசனம்? என்று அவர் என்னிடம் கேட்டார். திருக்குர்ஆனின் எல்லா வசனங்களும் மிர்ஸா சாஹிபின் உண்மைக்கு ஆதாரமாக இருக்கின்றது என்று நான் கூறினேன். திருக்குர்ஆனின் ஒவ்வொரு வசனமும் ஏதாவதொரு வகையில் நபியுடன் தொடர்புடையதாக உள்ளது என்பது உண்மைதான். ஆனால், சில வசனங்கள் எப்படிப்பட்டதாக இருக்கின்றது என்றால் அவற்றைப் புரிவதும் அது எந்த வகையில் நபியின் உண்மைக்கு ஆதாரமாகத் திகழ்கின்றது என்பதை விளக்குவதும் மிகவும் சிரமமானதாகும். ஒரு வசனத்தில் போர் பற்றிய சம்பவம் வந்திருந்தாலும் அந்த வசனம் மூலமாகவும் நபியின் உண்மையை நிரூபிக்க முடியும். ஆனால் அவற்றை சாதாரண இயல்பிலுள்ள மக்களால் புரிந்து கொள்ள முடியாது. ஆனால் எனக்கு எத்தகைய உறுதி இருந்தது என்றால் அல்லாஹ் அவர் மீது தனது ஆதிக்கத்தைச் செலுத்தி அவர் நாவிலிருந்தும் எத்தகைய வசனத்தைக் கூற வைப்பான் என்றால் அதன் மூலமாக மிகவும் விளக்கமான முறையில் ஹஸ்ரத் மஸீஹ் மவ்ஊது (அலை) அவர்களது உண்மை நிரூபணமாகி விடும் என்ற உறுதி எனக்கு ஏற்பட்டது.

பிறகு கூறுகின்றார்கள்: இறுதியில் அவர் இந்த வசனத்தை ஓதினார். வமினன்னாஸி மய்யகூலு ஆமன்னா பில்லாஹி வபில் யவ்மில் ஆகிரி வமாஹும் பிமுஃமினீன். அப்போது எனக்கு இது இறைவனின் ஆதிக்கமேயாகும். அவன் அவரது நாவுகளிலிருந்து அத்தகைய வசனத்தையே கூற வைத்துள்ளான் என்பது எனக்குப் புரிந்தது. நான் அவரிடம் இந்த வசனம் யாரைப் பற்றி கூறுகிறது? என்று கேட்டேன். இந்த வசனம் முஸ்லிம்களுடன் தொடர்புடைய வசனமா? முஸ்லிம் அல்லாதவர்களுடன் தொடர்புடைய வசனமா? என்று நான் கேட்டேன். அவர் ஏற்கனவே இந்தக் கேள்வியைக் கேட்டிருந்தார். அதாவது முஸ்லிம்கள் தொழுகின்றனர். நோன்புகளை நோற்கின்றனர். ஹஜ் செய்கின்றனர். இறைவன் மற்றும் அவனது தூதரின் மீது ஈமான் கொண்டுள்ளனர். அவ்வாறு இருக்கும்போது ஒரு நபி வர வேண்டிய என்ன தேவை இருக்கின்றது? என்று அவர் கேள்வி கேட்டிருந்ததால் இதற்குப் பிறகு அவர் இந்த வசனத்தைப் படித்ததும் இந்த வசனம் யாருடன் தொடர்புடையதாக இருக்கின்றது? என்று நான் கேட்டேன். அதற்கு அவர் அது முஸ்லிம்களுடன் தொடர்புடைய வசனமாகும் என்று பதில் கூறினார். அதற்கு நான் பிறகு இந்த வசனம் என்ன கூறுகின்றது என்றதும் முஸ்லிம்களில் கூட சிலர் கெட்டுப் போய் விடுகின்றனர். அவர்கள் நாவால் நாங்கள் மூஃமின்களாக இருக்கின்றோம் என்று கூறுகின்றனர். ஆனால் உண்மையில் அவர்கள் மூஃமின்களாக இருப்பதில்லை. மனிதன் தனது செயலால் அதனை நிரூபிக்காத வரை தன்னை மூஃமின் என்று கூறுவது மட்டும் போதாது என்று தான் திருக்குர்ஆன் கூறுகிறது. எனவே முஸ்லிம்களும் சீர்குலைந்து போகும் போது அவர்களை சீர்திருத்துவதற்காக அல்லாஹ் ஒரு நபியை அனுப்புவானா? அனுப்பமாட்டானா? என்பதை நீங்கள் கூறுங்கள் என்று நான் கூறினேன். எவ்வாறிருப்பினும், உள்ளங்களை திருப்திப்படுத்துவது அல்லாஹ்வின் பணியாகும்.

அவர்கள் கூறுகின்றார்கள்: அல்லாஹ்விடமிருந்தே அனைத்தும் வருகிறது. மனிதனின் ஆற்றல் எதையும் செய்ய முடியாது. எனவே நினைவில் கொள்ளுங்கள். உலகின் ஒவ்வொரு தேவையையும் நிறைவு செய்பவன் இறைவன்தான் என்ற உறுதியுடன் நிம்மதியிழந்த நிலையில் துஆக்கள் செய்யப்படாத வரை அது ஏற்றுக் கொள்ளப்படாது. இறைவன் தந்தவற்றிலிருந்தும் வழங்குகின்ற பலரும் உலகத்தில் இருக்கின்றார்கள். ஆனால், அவர்களால் பிறருக்கு ஆடைகளைத்தான் வழங்க முடியும். வீட்டை வழங்க முடியும். இறைவன் வழங்கிய அறிவிலிருந்தும் பிறருக்கு பயன்தரக்கூடியவர்கள் உலகில் இருக்கின்றார்கள் என்பதில் சந்தேகமில்லை. ஆனால் அதன் மூலமாக அவர்கள் நோயாளிகளுக்கு சிகிச்சை அளிக்க முடியும். இறைவன் வழங்கிய அறிவின் மூலம் பிறரைப் பாதுகாப்பதற்காக இலவசமாக வழக்கை நடத்தித் தருபவர்கள் உலகில் இருக்கத்தான் செய்கின்றார்கள். அவர்கள் ஃபீஸ் வாங்காமல் பிறருக்கு உதவி செய்வதற்காக அந்த வழக்கை நடத்தலாம். ஆனால் இந்த எல்லா விசயங்களையும் ஒட்டுமொத்தமாக தனது கைகளில் வைத்திருக்கும் எந்த மனிதனையும் இந்த உலகில் நாம் பார்க்க முடியாது. உள்ளங்களை மாற்றக்கூடிய தன்மை மனிதனின் கைகளில் இல்லை. உணர்வுகளை மாற்றக்கூடிய தன்மையும் மனிதனின் கைகளில் இல்லை. முழுக்க முழுக்க இறைவனிடம் மட்டும்தான் இவை அனைத்தும் உள்ளன.அவன் இவை அனைத்தையும் தனது ஆதிக்கத்தின் கீழ் வைத்திருக்கின்றான். அவனே உள்ளங்களையும் அதன் மறைவிலும் மறைவான உணர்வுகளையும் மாற்றுவதற்கான ஆற்றலை உடையவனாக இருக்கின்றான். எதுவரை நிம்மதியிழந்த நிலையில் துஆக்கள் செய்யப்படுவதில்லையோ எதுவரை எல்லா தரப்பிலும் அவநம்பிக்கை அடைந்த பிறகும் இறைவன் மீதும் முழுமையான நம்பிக்கை வைத்து துஆ செய்யப்படுவதில்லையோ அதுவரை துஆ ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது. ஆனால் இந்த வழிமுறைக்கேற்ப துஆ செய்தால் அது இறைவனது அர்ஸை கண்டிப்பாக சென்றடைகிறது. அது கண்டிப்பாக ஏற்றுக் கொள்ளப்படுகிறது. இதுவே ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்களது சொற்பொழிவில் உள்ள விபரங்களாகும்.

இவற்றை மேற்கோளாக வைத்து நானும் கூற விரும்புவது என்னவென்றால் இன்றும் கூட நாம் நிலைமைளை மாற்ற வேண்டும் என்றால் எல்லா ஆற்றல்களுக்கும் எஜமானனாக இருக்கின்ற இறைவன் முன்னால் குனிய வேண்டும். எல்லா ஆற்றல்களின் தலையூற்றாக அவனே இருக்கின்றான். எல்லாவிதமான உதவிகளையும் நாம் அவனிடமிருந்தே பெற முடியும். உள்ளங்களை திருப்புபவனும் அவன்தான். உள்ளங்களை தனது கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வருபவனும் அவன் தான. மக்களின் ஆற்றல்களை தனது கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வருபவனும் அவன் தான். அல்லாஹ் அப்படிப்பட்ட துஆக்களை செய்வதற்கான நல்வாய்ப்பை நமக்கு வழங்குவானாக!

U.K –வின் விருந்தோம்பல் துறையில் பணியாற்றி வந்த நமது ஒரு தூய பணியாளரும் இதற்கு முன் ஜெர்மனியிலும் மிக நீண்ட காலமாக பணியாற்றி வந்தவருமாகிய மதிப்பிற்குரிய அஸீம் சாஹிப் அவர்கள் இரண்டு நாட்களுக்கு முன்பாக வஃபாத் ஆகி விட்டார்கள். இன்னாலில்லாஹி வஇன்னா இலைஹி ராஜிவூன். அவர்களது ஜனாஸா இன்று இங்கு கொண்டு வரப்பட இருந்தது. ஆனால் சான்றிதழ் போன்றவற்றை பெறுவதில் சிரமங்கள் இருந்ததால் அவர்களது ஜனாஸாவை இங்கு கொண்டு வர முடியவில்லை. அல்லாஹ் அவரது தகுதியை உயர்த்துவானாக! ஒன்றிரண்டு நாட்களில் அவரது ஜனாஸா கொண்டு வரப்பட்டு ஃபஸ்ல் பள்ளிவாசலில் வைத்து தொழுகை நடத்தப்படும்.

மருத்துவமனையுடன் தொடர்புடைய எல்லா நடவடிக்கைகளும் நிறைவடைந்த பிறகு எப்போது அவர்களது உடல் கொண்டு வரப்படுமோ அப்போது தொழுகை நடத்தப்படும். தூய உள்ளம் கொண்டவராக இருந்தார். அர்ப்பணிக்கும் தன்மையுடன் பணியாற்றுபவராக இருந்தார். நம்பிக்கைக்குப் பாத்திரமாக நடந்து கொள்பவராக இருந்தார். படைப்பினங்களுக்கு தொண்டு செய்கின்ற உணர்வால் நிரம்பி காணப்பட்டார். ஒவ்வொருவரது வேதனையையும் உணரக்கூடியவராக இருந்தார். அல்லாஹ் இவரது தகுதியை உயர்த்துவானாக!

பிள்ளைகள் எல்லாருமே படித்துக் கொண்டிருக்கிறார்கள். இவருக்கு மூன்று பிள்ளைகள் உள்ளனர். இரண்டு மகள்களும் ஒரு மகனும் இருக்கின்றார்களா. இவர்களும் தூய்மையான உள்ளம் கொண்டவர்கள் ஆவார்கள். அல்லாஹ் இவர்களையும் தனது பாதுகாப்பில் வைப்பானாக! இவரது மனைவிக்கும் பொறுமையையும் தைரியத்தையும் வழங்குவானாக! இவரது பிள்ளைகள் மீது அல்லாஹ் நேசத்தின் கரங்களை வைப்பானாக! அதன் மூலமாக அவர்களுக்கு தந்தை இல்லாமல் இருக்கும் அந்தக் குறையை அல்லாஹ் தனது அருளால் நிறைவடையச் செய்வானாக!

★ ★ ★ ★ ★


**JUMUA KHUTBA**

**HAZRATH KHALIFATUL MASIH V**

at BAIT-UL-FUTUH MOSQUE, London.

on **22.02.2013**

Translated by : Maulavi M. RAFEEQ AHMAD H.A.

Published by : MAJLIS KHUDDAMUL AHMADIYYA
ASHURA EAST STREET, MELAPALAYAM,
TIRUNELVELI – 627 005.
TELEFAX : 0462 - 2352456